CHARTERED ACCOUNTANCY
CAB II
ENGLISH MEDIUM
STARTED ON
09.02.2013
VEAL BUSINESS COLLEGE
ADMISSION STILL OPEN
CONTACT : 0777 555 738

சித்திரை மாதம் 21ம் திகதி

May 04, 2013

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 41

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# தனிக்கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு???



## "திருமலை மாநாட்டில் டெலோ தீர்மானம்" (ஸ்ரீ)

தனிக்கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வதற்கான புரிந்துணர்வு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருமலையில் நடந்தேறிய டெலோ மாநாட்டில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாவிடின் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப் பட்டுள்ளது என தெரியவருகின்றது.

ஏற்கனவே இவ்விடயம் கொண்டுள்ள நிலையில் தமிழரசுக் கட்சியைத் தவிர்ந்த ஏனைய நான்கு கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முண்ணனி, (ஈ.பி.ஆர்.எல்.எவ்) தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம், (புளொட்) தமிழ் ஈழ விடுதலைக் கழகம் (டெலோ) ஆகியன இணைந்து "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு'' என்ற பெயரில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உருவாக்கி நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்தின் மூலம் தமிழரசுக் கட்சி த.தே.கூ வை தனி அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதில் நாட்டமற்றிருப்பதாகத் தெரிய வருகின்றது.

7



## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழரசுக் கட்சி சிதைக்காது

துரைரெட்னசிங்கம்

ஒப்பந்தத்தை ஏற்படுத்த முயற்சிக்கப் போவதாக திருகோணமலையில் நிகழ்ந்த டெலோவின் மாநாட்டில் தொடர்பாக தமித் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ள ஐந்து கட்சிகளும் பல்வேறுபட்ட கருத்துக்களை அதன் அடிப்படையில் முன்னணிக் கட்சியாக த.தே.கூ வைப் பதிவு செய்ய வேண்டும் என்ற தீர்மானமே அங்கு

## சம்பூர் தமிழ் குடும்பங்களை மீளக்குடியமர்த்தவும் – தண்டாயுதபாணி

சம்பூர் பிரதேசத்திலிருந்து 2006 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட தமிழ்க் குடும்பங்களை மீளக் குடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனை அரசியல் பிரச்சினையாகக்-கருதாமல் மனிதாபிமானப் பிரச்சினையாக அரசாங்கம் கருதி அம்மக்களை அவர்களின் வாழ்விடங்களில் மீள்குடியமர்த்த நடவடிக்கை..

7

## கனிய மணல் கூட்டுத்தாபன ஊழியர்கள் கவனயீர்ப்புப் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை புல்மோட்டை கனிய மணல் கூட்டுத்தாபன ஊழியர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

மேலதிக போக்குவரத்துக் கொடுப்பனவு, தூசு துப்புரவு முதலானவற்றுக்கு நிதி ஒதுக்கி தருவதாக கூறியும் அவ் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை..

7

## உயிரைக் கொடுத்தாயினும் உரிமைக்காக போராடுவேன்: ஹில்மி

தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒன்றுகூடல் வெள்ளிக்கிழமை கிண்ணியா பொதுநூலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது. தனியார் நிறுவனங்களில் தொழிலுக்காக செல்லும் தொழிலாளர்கள் ஏற்பாடு செய்த ஒன்று கூடலின்போது தொழிலாளர்களின் உரிமைகள் தொழில் தருநரின் கடமைகள் சம்பந்தமாக குறித்த ஒன்றுகூடல் அமைந்திருந்தது.குறித்த நிகழ்வுக்கு அதிதியாக அழைக்கப்பட்ட கிண்ணியா நகரசபை நகரபிதா டொக்டர் எம்.எம்.ஹில்மி சட்டத்தரணி தமது உரையில் ''தொழிலாளர்களின் உரிமைகளை உங்களால் வெற்றிகொள்ள முடியும் அந்த அந்தஸ்தை நீங்கள் பெறமுடியும்.

வியர்வை சிந்தும் உங்களால் உரிமைகளை வென்றெடுக்க..

7

NEW TRINCO STATIONERS

இலவச ரிசீவர் – பதிவு செய்யும் திறனுடன் 1, 3, 6, 12 மாதங்களுக்கான சன் டிரக்ட்

Free Receiver with Recording facility for 1, 3, 6, 12 months from Sun Direct

மேலும் அனைத்து வகையான செய்மதி தொலைக்காட்சி சேவைகளும்




தொடர்புகளுக்கு: 026 2223071, 077 7697184

## பிரதேச சபை வாகனத்தில் மோதுண்டு சிறுவன் படுகாயம்

வாகரை பிரதேச சபையின் வாகனத்தில் மோதுண்டு மாணவனொருவன் படுகாயமடைந்துள்ளார். இந்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

இந்த மாணவன் மேலதிக அவசர சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக...

7

## விறகு வெட்டச் சென்றவர்களை சுட்டுக் கொன்ற காவல்துறை மீது நடவடிக்கை

திருகோணமலை, கோமரங்கடவை காட்டுப் பகுதியில் கடந்த 2008 ம் ஆண்டு விறகு எடுக்கச்சென்ற 5 பேரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற சம்பவம் தொடர்பில் காவல்துறையினர் மூவர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்காக ஒப்படைக்கப் பட்டுள்ளதாக..

7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம்

### பூதம் வெளிப்படும் கிணறுகள் !!!

செங்கலடிக் கொலைகளின் பின்னர் சுவாரசியமாக அக் கொலைகளை இரசிக்கக் கற்றுக்கொள்ளச் சில இணையத் தளங்கள் தமது செய்திகளை புனையத் தொடங்கி விட்டன.

ஒரு பதினாறு வயதுப் பெண்ணின் மனப் பிறள்வைப் புரிந்து கொள்ள முடியாத பெற்றோரும் அதனைப் பயன்படுத்த முனைந்த தமிழ்ச் சமூகமும் கூட தம்மளவில் இக் கொலைகளுக்குப் பொறுப்பு கூறத்தான் வேண்டும்.

கண்ணதாசனின் அற்புதமான பாடலொன்று ஞாபகம் வருகின்றது. "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே.. அவர் நல்லவராவதும் தீயவராவதும்.... சிறிது மாற்றிக் கொள்வோமா.. பெற்றோர் வளர்ப்பினிலே" என்ற வரிகளின் தார்ப்பரியம் புரிந்து கொள்ளப்படாமலே அல்லது பேசப் படாமலே போய் விடுகின்றது இவ்வகைக் கொலைகளில்.... சமூகம் தனது இறுக்கமான கட்டுக் கோப்புக்களின் வரிகளின் ஊடாக அவர்களைக் கொலையாளிகளாகத் தீர்மானிப்பதுடன் அதற்கான முழுப் பொறுப்பையும் அவர்களின் மீதே சுமத்திவிட்டு நழுவிக் கொள்கின்றது.

எமது ஆறாம் அறிவின் மீது இரசனைக் குறிப்புக்களாகப் பெண்ணும், அவளின் அங்க லாவண்யங்களும், அவளுடனான பாலியல் உறவும் படிந்து கிடப்பதால் அதனைத் தாண்டிப் பெண்ணைப் புரிந்து கொள்ள முடியாதவர்களாக நாம் மாறி விட்டோம் என்பதே உண்மை... அதன் ஒரு விதமான வார்த்தைப் பிரயோகம் தான் காதலிக்கும் பெண்ணை பார்த்து நாம் பயன்படுத்தும் வார்த்தை "அவளை மடக்கி விட்டோம்" என்பது.

கொலைகளுக்குப் பின் அப் பதின்ம வயதுப் பெண்ணின் மீது வரையப்பட்ட காமம் கலந்த இரசனைக் குறிப்புக்கள் அவள் அனைவருடனும் உடலுறவு கொண்டாள் என்பதும் அவள் போதைப் பழக்கமுடையவள் என்பதுமான நிரூபிக்கப்படாத வரைவுகளே.

தனது குழந்தைக்குச் சுதந்திரம் கொடுத்த பெற்றோருக்கு இவ்விடயத்தில் எந்தப் பொறுப்பும் இல்லையா என் நண்பர்களே???? அவர்கள் கொல்லப்பட்டு விட்டதால் அவர்களின் தவறுகள் யாவும் கழுவப்பட்டு விட்டனவா?
கையடக்கத் தொலைபேசியினை வாங்கிக் கொடுத்தது யார்? வீட்டில் தனியே பெண் குழந்தையை விட்டு விட்டு கண்ணும் கருத்துமாய்ப் பணத்தைச் சேர்க்க முனைந்தது யார்? பதின்ம வயதில் பல தடவைகள் காதல் வயப்பட்டதாக கூறப்படும் ஆதாரமற்ற குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமானால் அதன் மூல காரணத்தைக் கண்டறிய முயற்சிக்காமல் இருந்தது யார்? இப்படி அடுக்கப்படும் கேள்விகளுக்கு பதிலை எவ்விதமான பக்கச் சார்புமின்றி உங்கள் ஆழ் மனதில் கேட்டுப் பாருங்கள்....
இயேசுவின் வரிகளை மீட்டுகின்றேன் நான்... எவனொருவன் குற்றம் செய்யவில்லையோ அவன் மட்டும் முன் வந்து அவளின் மீது கற்களை வீசட்டும்.....

# கவன ஈர்ப்புப் போரில் கிண்ணியா ரி.பி. ஜாயா மாணவர்கள்

இடவசதியற்ற நிலையில் வேறு கட்டடமொன்றில் இயங்கிவரும் கிண்ணியா ரி.பி. ஜாயா வித்தியாலயத்தின் மாணவிகளும் அவர்களது பெற்றோரும் 18.04.2013 புதன்கிழமை காலை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட ரி.பி. ஜாயா வித்தியாலயம் கடந்த 19 வருடங்களாக நெற்களஞ்சியசாலை கட்டடமொன்றில் அடிப்படை வசதிகளின்றி இயங்கி வருகின்றது. இந்நிலையில், அருகில் உள்ள கிண்ணியா பொது வைத்திய சாலையிலிருந்து துர்நாற்றம் வீசுவதாகவும் இதன் காரணமாக மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் பெற்றோர்கள் சுட்டிக்காட்டினர்.

தரம் 11 வரையான வகுப்புகளைக் கொண்ட ரி.பி. ஜாயா வித்தியாலயத்தில் சுமார் 800ற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவர்களுக்கு இடவசதியுடைய மூன்று மாடிக் கட்டடமொன்றை அமைத்துக்கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தினர். இது தொடர்பாக கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் கூறும்போது, ரி.பி. ஜாயா வித்தியாலயத்திற்கு என வேறு பகுதியில் பகுதியளவில் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடத்தின் பணிகளை இந்த வருடத்திற்குள் பூர்த்திசெய்வதற்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இணங்கியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலுமொரு புதிய கட்டடத்தை நிர்மாணித்துக் கொடுப்பதற்கான நிதியை அடுத்த வருட பண்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்குவதற்கும் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் உறுதியளித்ததாக கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து இக் கவனயீர்ப்புப் போராட்டத்தை அவர்கள் கைவிட்டுக் கலைந்து சென்றனர்.

## புதிய பொறுப்பதிகாரி – தமீம் –

திருகோணமலை பொலிஸ் பயிற்சி நிலையத்தில் தமிழ்மொழி பிரிவிற்கு பொறுப்பதிகாரியாக முகைதீன் தமீம் நியமிக்கப்பட்டுள்ளர். சீனக்குடா பொலிஸ் நிலையத்தில் பிரதி பொலிஸ் அதிகாரியாக கடமையாற்றி வரும் இவர் சுமார் இருபத்தினான்கு வருடங்களாக பொலிஸ் சேவையில் அனுபவமுள்ளவர். இவர் குச்சவெளி மற்றும் மூதூர் பொலிஸ் நிலையங்களிலும் பொறுப்பதிகாரியாக கடமை புரிந்துள்ளார்.

## புல்மோட்டையில் சட்டவிரோத மின்சார பெறுனர்கள் கைது

கடந்த மார்ச் 28 ம் திகதி புல்மோட்டைப் பகுதியில் அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மின்சார சபையினரிடம் அப் பகுதியில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்று வந்த 12 பேர் வகையாக மாட்டிக் கொண்டனர். இவ் அதிரடி நடவடிக்கையானது மின்சார சபையினருடன் காவல் துறையினராலும் இணைந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. கைது செய்யப்பட்ட 12 சந்தேக நபர்களும் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு தண்டம் அறவிடப் பட்டதாகத் தெரியவருகின்றது.

## கிறிஸ் மனிதனுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கால்களின் வலுவை இழந்த முகமட் சப்ராஸ்

கிண்ணியாவில் கிறிஸ் மனிதனை உருவாக்கிய கடற்படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்ட போது கடற்படைத் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிக் கால்களின் நடக்கும் வழுவை இழந்துள்ளார் முகமட் சப்ராஸ் என்ற இளைஞர்.

கடந்த இரண்டு வருடங்களாகத் தீவிர சிகிச்சை பெற்றுவரும் இந்த இளைஞனுக்கு மேலும் 300,000 ரூபாய்கள் சிகிச்சைக்காகத் தேவைப்படுவதாக தற்போது தெரிய வந்துள்ளது.

பரோபகாரிகளிடமிருந்து இப் பணஉதவியை அவர் எதிர்பார்த்துள்ளார். உதவி செய்ய விரும்புபவர்கள் ஹட்டன் தேசிய வங்கியின் கிண்ணியா கிளையின் கணக்கிலக்கமான 169020022208 ற்கு வைப்பிலிட முடியும். தொடர்புகளுக்கு 075-5641305.



## ஆசியமுரசு

# இந்திய உளவாளிச் சந்தேக நபர் மீது சாகும் வரை தாக்குதல்

பாகிஸ்தானியச் சிறையில் இந்திய உளவாளி என்னும் குற்றச்சாட்டுடன் சிறையிடப்பட்டிருந்த சரப்ஜித்சிங் மீது கடந்த வாரத்தில் சிறைக் கைதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் சுமார் ஒரு வாரமாக சுயநினைவற்றிருந்த அவர் சாவடைந்துள்ளார்.

பாகிஸ்தானியத் தீவிரவாதியான அப்சல் குரு இந்தியாவில் தூக்கில் இடப்பட்டதைத் தொடர்ந்து பாகிஸ்தானியச் சிறையில் ஆயுட்காலச் சிறைவாசத்தை 1991ம் ஆண்டுமுதல் அனுபவித்துவரும் சரப்ஜித்சிங்கிற்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விடயம் அனைவருக்கும் ஏற்கனவே தெரிந்திருந்தது என்று சரப்ஜித்சிங்கின் சட்டவாளர் ஏ.எவ்.பி செய்திகளுக்குத் தெரிவித்திருந்தார். குறித்த தினத்தில் பாகிஸ்தானியக் கைதிகள் ஆறு பேர் சரப்ஜித்சிங்கை கற்களால் தாக்கியிருந்தனர். இத்தாக்குதலில் தலை வெடித்துப் படுகாயம் அடைந்திருந்த அவர் தப்புவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே இருந்ததாக அவரைப் பரிசீலித்த மருத்துவர்கள் தெரிவித்திருந்தனர்.

## மியன்மாரில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுகின்றன...

உள்நாட்டில் இடம்பெற்று வரும் மதக் கலவரங்களால் கட்டாய இடம்பெயர்வுக்கு உள்ளாகியுள்ள மியன்மாரின் சிறுபான்மை இனமான முஸ்லிம்களுக்கு மருத்துவ மற்றும் அடிப்படை வசதிகளை மியன்மாரின் பௌத்த பேரினவாத அரசு மறுத்துள்ளதாக சர்வதேசச் செய்தி நிறுவனங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. இற்றைக்கு சுமார் 10 மாதங்களுக்கு முன் கடும் மத வன்முறையை மியன்மாரின் ரக்கீன் மாகாணம் எதிர்கொண்டது.

அம் மாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் மீது பௌத்த மதத்தினரால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளால் ஆயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் வசித்து வருகின்றனர்.

அம் முகாம்களை நிர்வகிக்கும் அரசு அம்மக்களுக்குப் போதிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதைத் தவிர்த்து வருகின்றது. அதன் மிக முக்கிய கட்டமாக இடம்பெயர்ந்துள்ளவர்களிடையே வேகமாகப் பரவிவரும் தொற்று நோய்களுக்கான மருத்துவ வசதிகள் அம் முகாம்களில் மிகக் குறைவாகவே காணப்படுவதாக அங்கிருந்தான செய்திகள் தெரிவிக்கின்றன. கிழக்கு மியன்மாரில் தற்போதுவரை முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகளை அரசினால் தடுக்கமுடியாதுள்ளது.

## தனிமையில் வாழ்ந்த முதியவர் பிணமாக மீட்பு

வெருகல் பிரதேசத்தில் மரமொன்றின் கீழ் அழுகிய நிலையிலிருந்த சடலமொன்றைக் காவல்துறையினர் மீட்டு அடக்கம் செய்துள்ளனர்.
குடிசையொன்றில் தனியாக வாழந்து வந்த பூமரத்தடிச் சேனையை சேர்ந்த 76 வயதுடைய பொன்னையா அரசரெட்ணம் என்பவரின் உடலமே இவ்வாறு மீட்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

விறகு பொறுக்கி விற்பனை செய்து தனது வாழ்க்கைச் சீவியத்தை ஓட்டிவந்த இம் முதியவர் கடைசியாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமையே விறகு பொறுக்கக் காட்டிற்குள் சென்றுவிட்டு வீடு திரும்பியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அவரது குடிசையின் முன்னுள்ள தென்னை மரத்திற்கு அடியில் இவரது சடலத்தை முதன் முதலில் சிறுமியொருவரே கண்டு தகவலை காவல்த்துறைக்கு அறியத் தந்துள்ளார். மரண விசாரணை அதிகாரியின் விசாரணைகளுக்குப் பின்னர் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய காவல்துறையினரால் சடலம் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

## கைக்குண்டுடன் வாகரை இளைஞன் கைது

வாகரையில் கைக்குண்டொன்றைத் தம்மகம் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். காவல்துறையினருக்குக் கிடைத்த துப்பொன்றின் அடிப்படையில் இராமலிங்கம் சண்முகலிங்கம் என்ற இளைஞனைக் காவல்துறையினர் கைது செய்து அவரிடமிருந்த கைக்குண்டையும் மீட்டுள்ளனர். அவர் இக்கைக்குண்டை விற்பதற்காகக் கதிரவெளிக்கு வருகை தந்திருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளார். எனினும் அதனைக் கொள்வனவு செய்ய இருந்தவர் தப்பிவிட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசமுரசு

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மேதின ஊர்வலமும் பொதுக்கூட்டமும்

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மேதின ஊர்வலமும் பொதுக்கூட்டமும் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இதன்போது அதிதிகள் மற்றும் சங்க உறுப்பினர்கள் பதாதைகளுடன் அழைத்துவரப்பட்டதுடன் முன்னாள் தலைவர் எஸ்.சுந்தரலிங்கம் மற்றும் வா.குணாளன் ஆகியோர் தலைவாரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.



## பெண்கள், குழந்தைகள் விற்பனையில் உலகின் மிகப் பிரதானமான நாடாக திகழும் இலங்கை!

மனித உயிருக்கான மரியாதை அற்றுப் போயுள்ளது. பிறந்த குழந்தையை கைவிட்டுச் செல்கின்றனர் குழந்தையை வீசி எறிகின்றனர். பெண்கள், குழந்தைகள் விற்பனை செய்யப்படும் உலகின் மிகப் பிரதானமான நாடாக இலங்கை திகழ்கின்றது என்று மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் பிரதீப மனமேந்திர தெரிவித்தார்.

காலியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடற்பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும் தங்காலை கரையின் ஊடாக ட்ரோலர் படகைப் பயன்படுத்தி 35 நாள்களில் ஆஸ்திரேலியாவுக்கு ஆள்களைக் கடத்துகின்றனர்.

வரலாற்றுக் காலத்தில் காணப்பட்ட அடிமைச் சேவக முறைமை இன்று சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கையாக மாற்றமடைந்துள்ளது.

மனித உயிருக்கான மரியாதை அற்றுப் போயுள்ளது. பிறந்த குழந்தையை கைவிட்டுச் செல்கின்றனர் குழந்தையை வீசி எறிகின்றனர். சந்தேகநபர்களை பொலிஸார் சித்திரவதை செய்ய முடியாது.

இந்த ஆண்டில் இதுவரையில் இவ்வாறான சித்திரவதைகள் தொடர்பில் ஒரு சம்பவமே பதிவாகியுள்ளது. எனினும், ஏதேச்சாதிகரமாக கைது செய்தல் தொடர்பில் 30 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு எதிராகப் பதிவாகியுள்ளது.

பொலிஸ் நிலையங்களில் ஒரு முறைப்பாட்டை சரியான முறையில் பதிவு செய்யக் கூடிய அதிகாரிகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. சட்டவிரோதமான உத்தரவுகளை கடைநிலை அதிகாரிகள் பின்பற்ற வேண்டிய தில்லை. என்றார்.

## ஐஸ் கிறீம் ஆசை தூண்டப்பட்டு சிறுமி துஷ்பிரயோகம்

ஐஸ் கிறீம் வாங்கி தருவதாக கூறி ஆறுவயது சிறுமியை அழைத்துச் சென்ற சிறுவர்கள் இருவர் அந்த சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சம்பவம் ஒன்று பண்டாரகமவில் இடம்பெற்றுள்ளது.

சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 12 மற்றும் 15 வயது சிறுவர்கள் இருவரை பண்டாரகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தனக்கு நடந்தவற்றை குறித்த சிறுமி தனது தாய் மற்றும் தந்தையிடம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து பெற்றோர் செய்த முறைப்பாட்டையடுத்தே குறித்த சிறுவர்கள் இருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## உயர் வலுக்கொண்ட உந்துருளிகள் வைத்திருக்க அனுமதித்தது அரசு

மீள ஏற்றுமதி செய்யப்படும் என்ற நிபந்தனைகளின் கீழ் கடந்த வருடம் டிசம்பர் மாதம் இலங்கையில் நடைபெற்ற இரவு நேர பந்தயங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பத்து உயர் வலுக் கொண்ட உந்துருளிகளை இலங்கையில் வைத்திருப்பதற்கு திறைசேரி அனுமதித்துள்ளது.

இவ் அனுமதியானது ஏப்ரல் மாதம் 11ம் திகதி வெளியான வர்த்தமானியில் 1000 உருளைக் கொள்ளளவு கொண்ட உந்துருளிகளை இறக்குமதி செய்யும் அனுமதியைத் தொடர்ந்தே கடந்த வருடம் இறக்குமதி செய்யப்பட்ட இவ்வகை உந்துருளிகளை தொடர்ந்து வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. இவ்வாறு டிசம்பர் மாதத்தில் இறக்குமதி செய்யப்பட்ட உந்துருளிகளுக்கு இறக்குமதி வரி இன்னும் செலுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

## சிங்கள சஞ்சிகை ஒன்றின் பிரதம ஆசிரியரின் வீடு சோதனைக்குட்படுத்தப்பட்டது

இத்தாலயா மற்றும் ஜிந்தா என்ற சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் சிறிலால் பிரியந்தவின் வீடு காவல்துறையால் கடந்த வாரம் சோதனைக்குட்படுத்தப்பட்டிருந்தது. அப்பிரதம ஆசிரியர் தெரிவிக்கையில் ஆரம்பத்தில் காவல்துறையினர் தன்னை கைது செய்ய முயன்றதாகவும் பின்னர் அம்முடிவை மாற்றிக் கொண்டு தன்னிடம் இருந்து விளக்கத்தைப் பெற்றுக்கொண்டு தனது வீட்டை சோதனையிட்டு விட்டுச் சென்றதாக தெரிவித்துள்ளார்.

காவல் துறையினரிடம் பல்கொடவில மஜிஸ்ரேட் நீதவானிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பிடியாணை இப்பிரதம ஆசிரியருக்கு எதிரானதாக இருந்துள்ளது. எனினும் அவரை கைது செய்யாமல் 3 மணி நேர விசாரணையினை மேற்கொண்டுவிட்டுச் சென்றுள்ளனர். காவல்துறைத் தலைமையகத்திலிருந்து களவு போயுள்ளதாக கருதப்படும் சில ஆவணங்கள் தொடர்பாகவே இவர் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை மறுத்துள்ள பிரதம ஆசிரியரிடம் அவருடைய சஞ்சிகையில் வெளிவந்த சில கட்டுரைகளில் தொலைந்த..

7

## "திருகோணமலை மடத்தடி ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தானம்" - ஒரு பார்வை -

திருகோணமலை மடத்தடி பிரதேசத்தில் பல நூறு ஆண்டுகளாக கோவில் கொண்டு அருளாட்சி நடாத்திவரும் மடத்தடி ஸ்ரீ முத்துமாரியம்பாளின் வருடாந்த கொடியேற்றம் கடந்த 25ம் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

கடந்த 15ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இவ் ஆலயத்தின் வருடாந்த பிரமோற்சவ விஞ்ஞாபனத்தில் 6ம் நாளான 20ம் திகதி கற்பூரச்சட்டி திருவழாவும், 8ம் நாளான 22ம் திகதி தீ மிதிப்புத் திருவிழாவும், 10ம் நாளான 24ம் திகதி ரதோற்சவமும் நடைபெற்றது.

அம்பாளின் கொடியேற்ற திருவிழாவில் கலந்து கொண்ட போதுதான், இந்த கோவிலை பற்றி எம்மில் பலருக்கு தெரிவதில்லை என தெரியவந்தது. இந்த கோவில் பற்றி நான் தேடியபோது எனக்கு கிடைத்த விடயங்களை இந்த கதைமூலம் உங்களுக்கு சொல்ல விரும்புகின்றேன்.

அந்தக் காலம் திருகோணமலை பறங்கியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலம். திருமலை வாழ் சைவத் தொண்டர்களுக்கு முதற்தலமாக விளங்கியது திருக்கோணேஸ்வரமே. பறங்கியரின் ஆக்கிரமிப்பால், திருக்கோணேஸ்வரம் சிதைக்கப்பட்ட பின்பு பக்தர்கள் பறங்கியருக்குப் பயந்து, சிறு சிறு கோவில்களை அமைத்து இறைவனை வழிபட்டு வந்தனர். அவ்வாறு அமைக்கப்பட்ட சிறு கோவில்களுள் ஒன்றாகத்தான் இந்த முத்துமாரியம்மன் கோவில் விளங்குகிறது. அப்படியென்றால் இதன் பழமையை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

பறங்கியர் ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில்தான், இந்தியாவிலிருந்து அம்மன் பக்தன் ஒருவன் இங்கு வந்து வாழ்ந்து கொண்டிருந்தான். அவன் தற்போது இந்த கோவில் அமைந்துள்ள இடத்தில் முத்துமாரியம்மனை வைத்து வழிபட்டு வந்தான். அவன், அந்த முத்துமாரியம்மனை கும்பத்தில் வைத்து கட்டிக்கொண்டு உலா வருவதுண்டு. பலர் இவருடன் சேர்ந்து முத்துமாரியம்மனை வணங்க தொடங்கினர். அப்பாளை தாங்கிக்கொண்டு கன்னியாவுக்கும் இவர் செல்வதுண்டு. இந்த செய்தி பறங்கிய அதிகாரி ஒருவருக்கு தெரிய வந்தது.

அந்த பறங்கிய அதிகாரியே, இந்த பக்தனின் செயலை அலட்சியப்படுத்தி கும்பத்தை காலால் தட்டிவிட்டார். அன்றிலிருந்து அந்த அதிகாரி நோய்வாய்ப்பட்டு படுத்தபடுக்கையானார். இந்த செய்தி எங்கும் பரவியது. நோய்வாய்ப்பட்ட பறங்கிய அதிகாரியின் அனுமதியுடன் அந்த பக்தர் அழைக்கப்பட்டார். அவரும் அந்த அதிகாரிக்கு, அம்மனை நினைத்து திருநீற்றை பூசி மந்திர உச்சாடனங்களை சொன்னார். பறங்கிய அதிகாரிக்கு நோயும் தீர்ந்தது. இதனால் மனம் மகிழ்ந்த அந்த பறங்கிய அதிகாரி தற்போது மாரியம்மன் கோவில் அமைந்துள்ள காணியையும் (சுமார் 10 ஏக்கர்), கன்னியாவிலுள்ள கழகந் சோலைக் காணியையும் நன்கொடையாக வழங்கினார்.

அந்த இந்திய பக்தரின் பராமரிப்பிலிருந்த முத்துமாரியம்மன் கோவில் அவரது மறைவின் பின்னர் அவரோடு நட்புறவிலிருந்த குருகுலத்தவர்களுடைய பராமரிப்பில் வந்தது.

மாரிமுத்து மணியம் என்பவர் சுமார் 150 வருடங்களுக்கு முன் இந்த கோவிலை திருத்திக்கட்டினார். அதன் பிறகு தி. மூத்த தம்பி மணியம் என்பவர் கோவிலுக்கு பல திருப்பணிகளை செய்து வந்தார்.

திரு. ராமையர், திரு. நாகமணி ஐயர், சிவ ஸ்ரீ சரவணமுத்து குருக்கள், சிவ ஸ்ரீ வைதீஸ்வர குருக்கள், புலவர் வை. சோமஸ்கந்த குருக்கள் என்று பரம்பரையாகவே அன்று தொட்டு அம்மனுக்குரிய பூசை புனஸ்காரங்கள் பூசகர்களால் நடாத்தப்பட்டு வந்தன.

இந்த பரம்பரையின் 6வது பரம்பரையை சேர்ந்த புலவர் வை. சோமஸ்கந்த குருக்கள் பூசை செய்த காலகட்டத்தில் ஆலய கருவரையிலுள்ள ஆதார சிலையில் கல்வெட்டு ஒன்று இருப்பது தெரியவந்தது.

அந்த கல்வெட்டு வருமாறு.

*சித்திர பானு வருஷம் (மார்கழி) மீ*
*திருக்கொணாசமலையூர் மாரியம்மனுக்கு*
*திருநல்வேலியூர்க்காடு இளைய பெருமாள்*
*பிள்ளை சிவகயிலம் உபயம். உ*

இனி நாம் இந்த கோவிலுக்கே உரிய சில சிறப்புக்களை பார்ப்போமா....?

வருடா வருடம் கும்ப விழா அனைத்துக் கோயில்களிலும் நடப்பது எமக்குத் தெரியும். இந்த கும்ப விழாவுக்கு இந்த கோவிலிலிருந்தே தீர்த்தமெடுப்பது வழக்காமாயிருந்தது. கோலில் உள்வீதியில் தெற்குப் பகுதியல் அமைந்திருக்கும் பேச்சியம்மன் கர்ப்பவதிகளுக்கு சுகப்பிரசவம் இடம்பெற அருள் பாலிக்கின்றார். இன்றும் கருவுளற்றிருக்கும் தாய்மார்கள் தமது சுகப்பிரசவத்திற்காக பேச்சியம்மனை வழிபடும் வழக்கம் காணப்படுகிறது.

அடுத்து ஒரு முக்கியமான சிறப்பு இந்த கோவிலுக்கு உண்டு. திருகோணமலையில் இந்த ஆலயத்தில் மாத்திரம்தான் துலாக்காவடி நடைபெறும்.

இத்தனை தொண்மையான வரலாற்றையும், சிறப்புக்களையும் கொண்ட முத்துமாரியம்மன் ஆலயம் இன்று முன்னிருந்த செழிப்பையும் செல்வாக்கையும் கொண்டிருக்கவில்லை. இந்த நிலையை மாற்றுவதற்கு ஆலய நிர்வாகமும், கோவில் சுற்றத்தவர்களும் முன்வர வேண்டும். எல்லாம் வல்ல அம்பிகையின் அருளால், ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் முன்பிருந்த செழிப்பை பெறவேண்டும்.

*முற்றும்.*

## நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் 21வது பௌர்ணமி தின நிகழ்வு

இந் நிகழ்வானது 27.04.2013 சனிக்கிழமையன்று மாலை 4.30 மணியளவில் தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றிருந்தது.

"இலக்கியமும் கசக்கும் உண்மைகளும்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் திரு. புஸ்பராசா அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இது தொடர்பில் எழுத்தாளர் நந்தினி சேவியர், மாயன், சூசை எட்வேட், தி. பவித்ரன் முதலானோர் தம் கருத்துக்களை பகிர்ந்தனர்.

தொடர்ந்து "நாம் எங்கே போகிறோம்" எனும் தலைப்பிலான பாவரங்கில் எஸ்தர் விஜிந்நந்தகுமார், சி. தேனுஷன், விஸ்வமித்திரன் முதலானோர் கவிதைகளை வாசித்ததை தொடர்ந்து சபையோர் கருத்தாடலுடன் நிகழ்வு நிறைவெய்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பலகாமம் த. வேலாயுதம்

# தம்பன் கோட்டை

பாகம் - 14

## வரலாற்று நாவல்

*சென்ற வாரம்...*
*பிரமுகர்கள் சக்கரவர்த்தியை வணங்கி சந்தித்து விடைபெற்று வணங்கிக்கொண்டு ஊர்களுக்கு திரும்பத் தொடங்கினார்கள்.*

*இனி...*

தன்பங்கிற்கு விடைபெற உதயகுமரன் அவசரப்படவில்லை. மன்னருடன் ஆறுதலாக ரங்கநாயகி பற்றி காதில் போட்டு எப்படியாவது காரியத்தைச் சாதித்துக் கொண்டுவிட-வேண்டும் என்பதில் அவன் முனைப்பாக இருந்தான்.

உதயகுமரனும் சிலவீரர்களும், இளஞ்செழியனும் வந்து அரசரை வணங்கி நின்றார்கள். அமர்ந்திருந்த அரசர் உப்பரிகைச்சாரளத்தின் பக்கமாக உதயகுமரனை அழைத்துச் சென்றார். அவர் அப்படிச் செய்தது உதயகுமரனின் வீரர்களுக்கு பெருமையாக இருந்தது. தங்கள் தளபதி சக்கரவர்த்திக்கு நெருங்கியவர் என்பதில் அவர்களுக்கு ஏதோ உயர்ந்த எண்ணம். உதயகுமரா.... தளபதி தலைநகர் வந்திருக்கிறார் என்ற தகவல் கிடைத்தது.என்றார்.

உதயகுமரனுக்கு இடி விழுந்த மாதிரி இருந்தது. அதே சமயம் சந்தேகமாகவும் இருந்தது.

அவர் படுக்கையை விட்டெழ ரொம்பநாளாகும் என்றார்களே பிரபு உண்மைதான்.... ஆனாலும் தளபதி தம்பன் நினைத்தால் எமனையே புறமுதுகிட வைத்து விடுவார் என்பதல்லவா பிரபலம், அவனை ஒருமுறை உற்றுப்பார்த்தவர் தொடர்ந்தார்.

அவருக்குப் பரிபூரண சுகம் இல்லைதான். ஆனாலும் அங்குள்ள ஆயுர்வேத மருத்துவர்கள் அவர் உடல்நிலைபற்றி மலையாளத்தில் நல்ல அபிப்பிராயம் கூறியிருக்-கிறார்கள்... அதைக்கேட்ட இவர்... எனக்கிப்போ பரவாயில்லை என்றும் கலம் ஏறி வந்துவிட்டார் போலிருக்-கிறது..... நானும் அவரைக் கண்டபிறகுதான் உண்மையை அறிந்து கொள்ளமுடியும்.

தளபதி குணமாகி வந்து விட்டார் என்ற சேதி உறைத்ததும் உதயகுமரனின் முகத்தில் ஏமாற்றம் படர்ந்து மறைவதை மன்னர் அவதானித்தாரோ இல்லையோ.... அவர் முகத்தில் இள நகை படர்ந்தது.

தளபதி தலைநகர் திரும்பியதற்கென்ன அங்கேயே அவருக்கு நிறைய அலுவல்கள் காத்திருகின்றன. தம்பன் கோட்டைப் பொறுப்பைவிட மேலான பொறுப்புக்கள் அவருக்கு இருக்கப் போகின்றன. தம்பன் கோட்டை தொடர்ந்தும் உன் பொறுப்பில்தான் இருக்கும். என்றார்...

அவர் சிரிப்பு அகன்றது. அவன் ஏதோ சொல்ல வாயெடுக்க முனைவது அவருக்கு புரிந்தது... ஆனாலும் அவனைப்பேச அனுமதிப்பதாகக் காணோம்.

சரி சரி நீ எப்போது கிளம்பப்போகிறாய்? என்று கேட்டார்.

நாளைய பொழுது புலர்ந்து வரும் வேளையில் புறப்பட ஆயத்தம் பண்ணச்சொல்லி கட்டளை-யிட்டிருக்கிறேன் பிரபு.

நல்லது நானும் நாளையே கிளம்புகிறேன். அதோ இரதத்தையும் தயார்படுத்துகிறார்கள். என்று சுட்டிக்காட்டினார். தங்கமாய் மின்னிய அவரது இரதம் கழுவப்பட்டுக்-கொண்டிருந்தது. எனக்கு மட்டுமல்ல, உனக்கும் ஓய்வு வேண்டும். விடைபெற்றுக் கொள். என்று கூறிவிட்டு உரையாடல் முடிந்து விட்டது என்பது போல் நின்று கொண்டிருந்த இடத்தைவிட்டு ஆசனத்திற்காக நகர முற்பட்டார் சக்கரவர்த்தி.

உதயகுமரனுக்கோ முகம் வாடிவிட்டது. இனி மன்னனுடன் பேசமுடியாது. வந்தவேலை நிறை-வேறப்போவதுமில்லை. ரங்கநாயகியிடம் நான் என்ன சொல்வேனோ?... இதை நினைக்கும்போதே அவன் முகம் கறுத்து வாடியது.

வேறு வழிதெரியாது இயந்திரம்போல் வெளியேற, திரும்பி அவன் ஒரு சில அடிகளே வைத்திருப்பான்.

உதயகுமரா...! என்று அழைத்தார். அவன் இரண்டே எட்டில் அவர் அருகில் நின்றான். நீ வாலிபன், துடிப்புக்கள் அதிகமான பருவம், அதனால்தான் நான் சொல்ல வேண்டியிருக்கின்றது. நீ அரசகுலத்தினன் என்பதையோ, அரசகுலத்தவர் வேறு இனங்களில் பெண் கொள்ளமுடியாது என்பதையோ மறந்துவிடாதே... நீ ஜாக்கிரதையாக நடந்துகொள்... நீ சிந்தித்துப்பார்.... மக்கள்.... நாடு... இதை முன்நிறுத்தியே முடிவு எடுக்கவேண்டியவர்கள் அரசகுலத்தினர். நீ முன்னேற்றம் அடையவேண்டும், பேர் புகழ் ஈட்டவேண்டும், என்பதுதான் என்னுடையதும் உன் அன்னை இரத்தினாவதி தேவியினதும், உன் சிற்றன்னையினதும் எதிர்பார்ப்பு....எங்கள் எதிர்பார்ப்பைச், சிதைத்துவிடாதே... அரசகுலத்தவருக்கு சொந்த விருப்பு வெறுப்பு இருக்கமுடியாது....இருக்கவும் கூடாது...

அரசர் பேசப் பேச சம்மட்டியால் தலையில் அடிப்பது போல் இருந்தது. ஆச்சரியமாகவும் இருந்தது. என்னைப்பற்றித் தகவல் அவருக்கு கிடைத்திருக்கிறது.!

நீ போகலாம்... என்று உள்அறைக்குச் சென்றுவிட்டார் மன்னர். அவனால் ஓரடி கூட எடுத்து வைப்பது சிரமமாக இருந்தது. தம்பன் கோட்டையில் அவன் கட்டியது வெறும் மணல் கோட்டைதானா? மன்னன் கூறிய வார்த்தைகள் அவன் காதில் நாராசம் போல் பாய்ந்தன. அப்படியானால் ரங்கநாயகி...? அவளை மறந்துவிடவேண்டியதுதானா?

தளபதி தலைநகர் வந்துவிட்டார் என்றதுமே அவனுக்கு ஒரு வகையில் ஏக்கம் பிடித்துவிட்டது. அப்படி-யென்றால் தம்பரிடம் கோட்டையைப் பொறுப்புக் கொடுத்துவிட்டு தலைநகருக்கு கிளம்பவேண்டி-யிருக்குமே... அப்படியானால் ரங்க-நாயகியை எப்படி சந்திப்பது? என்ற ஏக்கம்அவனுக்கு.... மறுகணமே ஒரு நப்பாசையும் உதித்தது. தம்பரிடம் கோட்டையை ஒப்படைத்துவிட்டு பொறுப்பகளை எல்லாம் ஒதுக்கி-வைத்துவிட்டு ரங்கநாயகியுடன் இந்தியா கிளம்பிவிடலாமா? என்று ஆசை கிளம்ப, மன்னரிடமே அதை சொல்லிவிடுவது என்று சிந்திக்க தலைப்பட்டான்.

ஆனாலும் எந்த சிந்தனைகளும், திட்டங்களும் மன்னரின் முன்னிலையில் எடுபடவேயில்லை.... மாறாக அரச குலத்தவர் வேறு இனங்களில் பெண் கொள்ளமுடியாது... நீ ஜாக்கிரதையாக நடந்துகொள் எங்களை ஏமாற்றிவிடாதே, என்ற மன்னரது வார்த்தைத் தொடர்கள் அவன் நாடி நரம்புகளை எல்லாம் ஒடுங்கச் செய்துவிட்டன.

*தொடரும்...*

---

# இலங்கையின் இனப் பிரச்சினைகளும் மொழி உரிமைகளும்

சங்கீர்த்தனா

**இக்கட்டுரை.. மனித உரிமைகள் திணைக்களத்தினால் மொழி உரிமைகள் தொடர்பாக அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டது.**

*கடந்த வாரத் தொடர்ச்சி...*

திறமைக்கு முன்னுரிமை கொடுத்த காலமெல்லாம் மலையேறி-விட்ட நிலையில் எங்கு சென்றாலும் மொழிக்கு உரிமை கொடுக்கும் நிலை வந்துவிட்டது. 1956ல் சிங்கள மொழி அரச கரும மொழியாதல். 1958ல் தமிழ்மொழி உபயோகச் சட்டம் செயற்படுத்தப் படாமை ஆகியவற்றுக்கு இடையே குறிப்பிட்ட கால எல்லையுள் சிங்கள மொழி தேர்ச்சி பெற வேண்டும். என்ற நிபந்தனை அச்சொட்டாக அமுலாகியது. அவ்வாறு தேர்ச்சி பெறாதோரின் சம்பளம் இடை நிறுத்தப்பட்டது. இதை மையமாக வைத்து கொடும்பு நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அது தோல்வியில் முடிய இங்கிலாந்தில் கோமறைக் கழகத்தில் வழக்குத் தாக்கல் செய்ப்பட்டது. தமிழ் அரச ஊழியரான கோடீஸ்வரனுக்கு வெற்றியும் கிடைத்தது.

இதன் மூலம் 1972ம் ஆண்டு அரசியலமைப்பின் 6ம் உறுப்புரைக்கு அமைய பௌத்த மதம் அரச மதாமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இவ்வாறாக மொழிச் சட்டங்கள் செயற்படுத்தப் படாமையுடன் மொழி உரிமைக்கான போராட்டம் ஆயுதப் போராட்டமாக பரிணமித்து இனப் பிரச்சினைக்கு வித்திட்டது. அன்று தொட்டு இன்று வரை எல்லாவற்றுக்கும் உரிமை கொடுத்தும் கொடுக்கப்படாத நிலையில் உள்ளது இன்றைய தமிழினம். சிறுபான்மையினர் என்ற முத்திரையும் தரிக்கப்பட்டவர்களாக இன்னமும் போராடிக்கொண்டுதான் உள்ளனர் தமிழர்.

இனப் பிரச்சினைக்கு ஜெனிவா குழு பல முறைகளில் தீர்வு எடுக்கப்பட்டும் இன்னும் இங்கு நடைமுறைப்படுத்த முடியாத நிலை. ஜெர்ரி வான்டர் வோல்ட் என்பவர் புகழ் பெற்ற புகை படக் கலைஞர் ஒரு தரம் தென்னாபிரிக்க காட்டில் புகுந்த ஜெர்ரி அங்கு நடந்த ஒரு வேட்டையாடலை அவரது கமரா படம் பிடித்தது. கடும் பசியில் இருந்த பெண் சிங்கம் மானை துரத்தியது. மானும் தன்னால் இயலும் மட்டும் ஓடிக்கொண்டிருந்தது. சிங்கம் களைத்தாலும் மானை வேட்டையாடி தீருவதென்று உறுதியாக இருந்தது. கடைசியில் மானின் தப்புதல் பற்றிய கனவு சிங்கத்தின் கடைசிப் பாய்ச்சலில் தகர்ந்தது.

தன் முழுப் பலத்தையும் பிரயோகித்து மானின் கழுத்தை கௌவியது. மானோ துடித்த படி வீழ்ந்தது. இனி ஓடினாலும் சிங்கத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது. அதனால் அமைசியாக சாவை சந்தித்தது. ஏற்கனவே கொடும் பசியில் இருந்த சிங்கம் தாமதிக்காமல் மானை சாப்பிடத் தொடங்கியது அப்போது எதிர்பாராதவாறு அந்த மானின் வயிற்றுக்குள் குட்டியிருப்பதை சிங்கம் காண நோர்ந்தது. அவ்வளவுதான் வாயில் கௌவியிருந்த சதைத் துண்டுகளை கீழே போட்டுவிட்டு அந்தக் குட்டியை வெளியே மீட்டெடுத்தது.

ஆனாலும் பூரண வளர்ச்சி பெறாததால் அந்தக் குட்டி கருப்பையை விட்டு வெளியே வந்ததும் உயிருக்காக போராடத் தொடங்கியது. சிங்கமும் எப்படியாவது குட்டியைக் காப்பாற்ற வேண்டும் என்று அங்கும் இங்கும் அலைந்து போராடியது. மானைப் பிடிப்பதில் இருந்த வீரம் மான் குட்டியை காப்பாற்றுவதில் தோற்று விட்டது. சற்று நேரம் சென்றதும் மான் குட்டியை முகர்ந்து பார்த்து குட்டி இறந்ததை உணர்ந்தது. மானையும் குட்டியையும் பார்த்த படியே வெகு நேரம் உட்கார்ந்திருந்தது சிங்கம். ஒரு கட்டத்தில் சிங்கமும் சரிந்து விழுந்தது.

இவற்றையெல்லாம் பதிவு செய்த ஜெர்ரியும் அவரது குழுவினரும் அங்கு ஓடிச்சென்று சிங்கத்தைப் பார்த்தனர். சிங்கம் இறந்திருப்பதை உறுதி செய்து கொண்டனர். ஒரு பக்கம் வாட்டிய பசியை தாள முடியாமலும், தாயையும் குட்டியையும் கொன்ற குற்ற உணர்வாலும் இறையை உண்ணாமல் தன்னையே மாய்த்துக் கொண்டது பெண் சிங்கம். இயற்கையின் விதிகளை மீறி தாய்மை, பரிதாபம், சிறுசுகள் மீதான கருணை என்ற உணர்வுகள் ஐந்தறிவு படைத்த ஒரு ஊனுண்ணி விலங்கின் நெஞ்சைக் கூட கரைத்து விடுகின்றது. ஆனால் மனிதர்கள் மாத்திரம் தங்களுக்கு மட்டுமே இருப்பதாக மார்பு தட்டிக்கொள்ளும் மனிதத்தை அடகு வைத்து விட்டு மிருகங்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். சில வேளைகளில் அத்தகைய கொடூர மனிதர்களை தங்களுடன் ஒப்பிட்டதற்காக விலங்குகள் கோபித்து கொள்ளக் கூடும்.

மிருகங்களே மாறிவிட்ட நிலையில் ஆறு அறிவு படைத்த மனிதனால் ஏன் மாற முடியவில்லை. கோபம், சாதி வெறி, மொழிப்பாகுபாடு, பொறாமை போன்ற தேவையற்ற குணங்களை அகற்றி மனிதனாக வாழ முயற்சிப்போம் தன் வாரமே சமுதாயம் திருந்தும் நாடும் எழுச்சி பெறும்.

ஆசியக் கண்டத்துள் பல்வேறு நாடுகள் பல்லினக்கக் குழுமத்தைச் சார்ந்த நாடுகளாக விளங்கி வருகின்றன. மொழி, இனம், சமயம், கலாசாரம் மற்றும் வரலாற்று வளர்ச்சியில் பல்லினத் தன்மை பேணப்பட்டு வரும் ஆசியக் குழுமத்துள்ள அமைப்பால் மட்டுமன்றி இன, மத, மொழி பேதங்களால் பல்லுருவத்தன்மை பெற்று விளங்கும் ஆசியத் தீவான இலங்கையின் மிகப் பிரதானமான இனப் பிரச்சினையின் தோற்றுவாய் மொழி சம்மந்தப் பட்டதாகவே அமைந்திருக்கின்றது. இதற்கு கடந்த கால அரசியல் வரலாறுகள் சான்றுகோல்களாய் அமைகின்றன.

ஏன் இலங்கையின் இனப்பிரச்சினையின் அடிநாதம் மொழி உரிமைகள் மீதான மறுப்பாய் இருந்தன என்பதில் எவ்வித ஐயமும் இல்லை?

*ஆக்கம்:*

*சங்கீர்த்தனா காளிமுத்து*
*தரம் - 11*
*புனித மரியாள் கல்லூரி*
*திருகோணமலை*

---

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**

**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**

**1929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புரசின்

# உலக வலம்

## இராட்சத வினோத உருவச் சிலைகள் பூசணிக்காயினுள்

அமெரிக்காவில் பூசணிக்கா-யொன்றில் இராட்சத வினோத உருவச் சிலைகள் சித்தரித்து வைக்கப்-பட்டிருக்கின்றன. இக்காட்சியைக் கண்டவர்கள் தமது வியப்பையும், குதூகலத்தையும் வெளிப்படுத்து-கின்றனர் என அதனை அமைத்த சிற்பவியலாளர் தெரிவிக்கிறார்.

இவ் வருடம் உற்பத்தி செய்யப்பட்ட பெரிய அளவிலான பூசணிகக்காயில் இவ்வாறான இராட்சத உருவம் அமைத்தனர். அமெரிக்காவின் தாவரப் பூங்காவில் வைக்கப்-பட்டிருக்கும் பூசணிக்காயினுள் இராட்சத உருவங்கள் அமைக்கப் பட்டிருப்பது மிகவும் கவர்ச்சியானதென பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.



அமெரிக்க சிற்பியான விலா பிரே என்பவரால் இவ்வாறான புதிய உருவமைப்பு பூசனிக்காயில் செய்யப்பட்டது பாராட்டக் கூடியதென தெரிவிக்கப்படுகிறது. இவ் வினோத உருவங்களை சிற்பவியலாளர் செய்வதற்கு 1683 கிலோ நிறையான இராட்சத பூசனிக்காயை பயன்படுத்தியிருக்கிறார்.

## அமெரிக்கர் ஒருவரை சிறையிலிட்டது வடகொரியா

வடகொரியாவிற்கு எதிராக இராச தந்திரச் செயற்பாடுகளில் ஈடுபட்டார் என்ற குற்றச் சாட்டில் கென்னத் பே என்ற அமெரிக்கர் ஒருவருக்கு பதினைந்து ஆண்டுகாலக் கடுங்காவற் சிறைத்தண்டனையை வடகொரியா விதித்துள்ளது.

இக் கடுங்காவற் சிறையில் கல்லுடைக்குந் தொழிலைச் செய்ய அவர் பணிக்கப்பட்டுள்ளார். அவரை மனிதாபிமானத்தின் அடிப்படைகளில் விடுவிக்குமாறு அமெரிக்கா கோரியிருந்ததை வடகொரியா சட்டை செய்யவில்லை. குற்றத்தை ஏற்றுக்-கொண்டுள்ளார் அவர் என வட-கொரியா தெரிவித்துள்ளது. வட-கொரியாவிற்குள் வருகை தந்தள்ள பே வலிதான விசாவுடனேயே வடகொரியா-விற்குள் நுழைந்துள்ளதுடன் அவரைக் கைது செய்து சிறையில் இட்டு வடகொரியா அமெரிக்காவுடன் அரசியற் பேரம் பேசலுக்காக அவரைப் பயன்படுத்தப் போவதாக அமெரிக்க அலகுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

## விண்வெளிக்கு செல்ல தனியார் விண்கலம்

அமெரிக்காவை சேர்ந்த விர்ஜின் காலாக்டிக் என்ற தனியார் நிறுவனம் விண்வெளிக்கு சுற்றுலா பயணிகளை அனுப்ப திட்டமிட்டு அதற்காக எஸ்.எஸ்.2 என்ற விண்கலத்தை தயாரித்துள்ளது.
அமெரிக்காவின் நியூமெக்சிகோவில் உள்ள விண்வெளி தளத்தில் அதன் சோதனை ஓட்டம் நடைபெற்றது. அப்பொழுது எஸ்.எஸ்.2 விண்வெளி ஓடத்தை டபிள்யூ கே.2 என்ற ராக்கெட்டின் மூலம் விண்ணுக்கு அனுப்பினர்.

அது 47 ஆயிரம் அடி உயரத்துக்கு சென்ற-தும் விண்கலம் ராக்கெட்டில் இருந்து பிரிந்து, ஒலி வேகத்தை விட அதிகமாக செல்லக்-கூடிய "சூப்பர் சானிக்" வேகத்தில் பாய்ந்து சென்றது. இதன் மூலம் சோதனை ஓட்டம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அதை தொடர்ந்து இந்த ஆண்டு இறுதிக்குள் விண் வெளிக்கு சுற்றுலா பயணம் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## துவைக்காமலேயே தொடர்ந்து 100 நாட்களுக்கு உபயோகிக்கக்கூடிய சட்டை – அமெரிக்காவில் அறிமுகம்

துவைக்காமல், தொடர்ந்து 100 நாட்கள் உபயோகப்படுத்தக்கூடிய விதத்தில் ஒரு சட்டையை அமெரிக்கா-வின் உல்ரூபிரின்ஸ் என்ற நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

உல்லன் நூல் கலந்த துணிகள் கசங்காது, வியர்வை வாடையை வெளியிடாத தன்மை கொண்டது. காட்டனை விட ஆறு மடங்கு உழைக்கக் கூடியது என்பதால் இந்த வகைத் துணியில் நவீன காலத்திற்கு ஏற்ப ஆழ்நீல கலரில் சிறிய கட்டங்கள் கொண்ட சட்டையை வெளியிட்டுள்ள-தாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது இதனை அணிந்து பார்த்த நபர்கள் கூறுகையில், நாங்கள் எப்படி உபயோகித்தாலும் சட்டைகள் புதிது போலவே இருக்கின்றன என்று தெரிவித்துள்ளனர்.

மேலும் எல்லோரும் விரும்பும் விதத்திலும், எப்போதும் அணியக் கூடிய வடிவத்திலும், சாதாரண விலை மதிப்பிலும் இந்த சட்டைகளை உருவாக்கியுள்ளதாக அந்த நிறுவனம் தங்களது இணையதளத்தில் தகவல் வெளியிட்டுள்ளது.

## செவ்வாய்க் கிரகத்தில் நிரந்தரமாக குடியேற 20 ஆயிரம் பேர் விண்ணப்பம்

டச்சு நாட்டில் இயங்கி வருகின்ற லாப நோக்கமற்ற ஓர் நிறுவனம், எதிர்வரும் 2023ம் ஆண்டில் செவ்வாய் கிரகத்தில் மக்களை நிரந்தரமாக குடியேற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

ஒருவழிப் பயணமாக செவ்வாய் கிரகத்திற்கு செல்ல விரும்புவோர் தங்களது பெயர்களை பதிவு செய்துக் கொள்ளலாம் என்று 4 தினங்களுக்கு முன்னர் அந்நிறுவனம் விளம்பரம் செய்திருந்தது.
செவ்வாய் கிரகத்தில், ஆண்டின் 6 மாத காலத்திற்கு தொடர்ந்து பூமியை தாக்கும் சாதாரண புயலை விட 6 மடங்கு சக்தி வாய்ந்ததாக இருக்கும் என்று அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறி வருகின்றனர்.
இருப்பினும், இந்த வானிலை அறிக்கையைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் நான்கே நாட்களில் செவ்வாய் கிரகத்தில் குடியேற விருப்பம் தெரிவித்து சுமார் 20 ஆயிரம் பேர் விண்ணப்பம் செய்துள்ளனர். இவர்களில் 600 பேர் சீனர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 13

பிரதீபா

1. நீரைத் தூய்மைப்படுத்தும் முறைகளில் ஒன்றல்லாதது?
   1. கொதிக்க வைத்தல் 2. அடையவைத்தல் 3. குளோரின் சேர்த்தல்
2. பாதசாரி கடவையை குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள நிறம் யாது?
   1. சிவப்பு 2. நீலம் 3. மஞ்சள்
3. நீரை மிக விரைவாக உறிஞ்சும் மண்வகை எது?
   1. மணல்மண் 2. நன்மண் 3. களிமண்
4. பித்தளை, அலுமினியம், மண் பாத்திரங்களை தூய்மையாக்குவதற்கு மிகவும் பொருத்தமான பொருட்கள் முறையே?
   1. சாம்பல், விம், பழப்புளி 2. பழப்புளி, விம், சாம்பல்
   3. பழப்புளி, சாம்பல், விம்
5. குதிரையை அடக்கிக் கையாள்வதற்கு பயன்படுத்தப்படும் கருவி எது?
   1. கடிவாளம் 2. அங்குசம் 3. துறப்பணம்
6. பின்வருவனவற்றில் வெடித்துப் பரம்பலடையும் வித்து எது?
   1. நெருஞ்சி 2. நாயுருவி 3. காசித்தும்பை
7. "நீங்கள் வகுப்பறையில் சத்தமிடுவது மற்றவர்களின் கல்விக்கு இடையூறு விளைவிக்கின்றது. நீங்கள் அமைதியாக இருப்பது நல்லதல்லவா?" இக்கூற்றின் மூலம் விளங்கிக் கொள்வது?
   1. முரண்பாடு ஏற்படும் 2. பிறர் பயப்படுவர்
   3. பொறுப்புணர்ச்சி ஏற்படும், பிரச்சினை தீரும்
8. ஒரு வியாபார நிலையத்தில் பழவகைகளும், மரக்கறி வகைகளும் அடங்கிய 5 பெட்டிகள் இருந்தன. ஒவ்வொரு பெட்டியிலும் ஒரே வகையான மரக்கறியோ பழவகையோ மாத்திரம் உள்ளது. மூன்று பெட்டிகளில் மாத்திரம் மரக்கறி வகைகள் இருந்தன. இதற்கமைய பெட்டிகளில் உள்ள பழ வகைகளும், மரக்கறி வகைகளும் எதுவாக இருக்கக்கூடும்?
   1. அன்னாசி, தக்காளி, முள்ளங்கி, நோக்கோல், கரட்
   2. பிப்பிஞ்ஞா, நோக்கோல், ஸ்ரோபரி, அன்னாசி, கொய்யா
   3. புடோல், தோடை, பாகல், லொவி, பீற்றூட்
9. குமாரும், சரத்தும் மிகவும் நெருங்கிய நண்பர்கள். இவர்களிடையே ஒரு போதும் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதில்லை. எப்போதும் மகிழ்ச்சியாகவே இருப்பர். இதனை விளக்கும் உவமைத் தொடர்?
   1. கீரியும், பாம்பும் போல 2. பூவும் மணமும் போல
   3. சாடிக்கேற்ற மூடி போல
10. புராதன காலத்தில் விஜயனும் அவனது தோழர்களும் வந்திறங்கிய இடம் எது?
   1. தம்பபன்னி 2. கோகன்ன 3. தம்மன்னி
11. இலங்கையில் வாழும் பெரும்பான்மையான மக்களின் கலாச்சாரத்துடன் தொடர்புடைய தாவர இலை எது?
   1. அரச இலை 2. வேப்பிலை 3. வெற்றிலை
12. மதியவேளை கீரை வகைகளைச் சுற்றிக் கொண்டு வந்த பொலித்தீன் பையினுள்ளே நீர்த்துளிகள் காணப்பட்டது. இந்நீர்த்துளிகள் தோன்றிய விதம்?
   1. ஆவியாதல் 2. ஆவியுயிர்ப்பு 3. மழைத்துளி
13. தோட்டத்திலுள்ள தாவரமொன்றை சிரட்டை ஒன்றினால் ஒருவார காலம் மூடி வைத்தபின், சிரட்டையை நீக்கும் போது அவதானிக்கக் கூடிய மாற்றம் எது?
   1. தாவர இலைகள் வெளுறிக் காணப்படும்
   2. தாவரம் இறந்து விடும்
   3. தாவர இலைகள் வாடிக் காணப்படும்
14. மீன் சந்தையொன்றில் மீனை வாங்கும் போது கவனிக்க வேண்டிய பிரதான விடயம் யாது?
   1. மீன் வகையிலுள்ள போசணைப் பெறுமானம்
   2. மீனுக்கு ஐஸ் போடப்பட்டமை
   3. மீன் பழுதடைந்துள்ளதா என சோதித்தல்
15. ஒரு நோயாளிக்கு ஒரு தடவைக்கு இரண்டு தேக்கரண்டி வீதம் ஒரு நாளுக்கு மூன்று தடவை படி ஐந்து நாட்களுக்கு மருந்து கொடுக்கப்பட்டது. ஒரு தேக்கரண்டி கொள்ளத்தக்க திரவத்தின் கனவளவு 5மி.லீ. எனின் அவருக்கு ஒரு நாளுக்குக் கொடுக்கப்பட்ட மருந்தின் கனவளவு யாது?
   1. 30மி.லீ 2. 150மி.லீ 3. 15மி.லீ
16. தரம் 5 கணித புத்தகத்தை விரிக்கும் போது, இடது கைப்பக்கம் 104 ஆக இருந்தது. அடுத்த பக்கத்தை விரிக்கும் போது வலது கைப்பக்கம் இருக்கும் பக்க எண் எது?
   1. 106 2. 105 3. 107
17. 150மி.லீ பாலின் விலை ரூபா 35 எனின், 1.2லீற்றர் பாலின் விலை யாது?
   1. ரூபா 420 2. ரூபா 280 3. ரூபா 350
18. குமார் தெற்கு நோக்கி நிற்கும் போது, வலது கைப்புறமாக இரு தடவை செங்கோணமாக திரும்பினான். குமார் தற்போது நோக்கியிருக்கும் திசை எது?
   1. மேற்கு 2. வடக்கு 3. கிழக்கு

பெயர்: ...................................................................
...................................................................
முகவரி: ...................................................................
...................................................................
...................................................................
பாடசாலை: ...................................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிக் கட்சியாகுமா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு?

மாயன்

இவ்வாரம் திருக்கோணமலையில் தமது மத்திய குழுவின் மாநாட்டை நடாத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியான தமிழீழ விடுதலைக் கழகம் - டெலோ தமது மாநாட்டின் தீர்மானங்களில் மிக முக்கிய தீர்மானமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை தனிக்கட்சியாகப் பதிய வலியுறுத்தியிருந்ததுடன் அதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளையும் முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்திருந்தது.

இம் முன்னெடுப்புக்களை எவ்வாறு நிகழ்த்தவுள்ளது என்பதே இங்கு ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

முதலில் பொதுவாகவே அரசியல்வாதிகள் அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும் என்று அறிக்கைகள் விடுவார்களேயன்றி அவற்றை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதைத் தெரிவிப்பதில்லை.

ஆனால் டெலோ அமைப்பின் மாநாட்டுத் தீர்மான அறிவிப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைத் தனிக்கட்சியாகப் பதிவுசெய்யத் தாம் முன்னெடுக்க இருக்கின்ற நடவடிக்கை என்ன? என்பதை வெளிப்படையாக சொல்லியிருக்கின்றமை ஒரு சிறந்த விடயமாகும்.

அதன்படி ஒரு "புரிந்துணர்வு உடன்படிக்கையினை" (ஆழுரு - ஆநஅழசரனெரஅ ழக ருனெநச-ளவயனெைப) முதலில் உருவாக்குவதற்கு டெலோ முயற்சிக்கப் போகின்றது.

அவ்வாறாயின் இப்போதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடையே எழுத்தாலான புரிந்துணர்வு உடன்படிக்கைகள் எவையும் இல்லையா? இல்லைதான்.

ஒக்டோபர் 20, 2001ல் உருவாக்கப்பட்டதிலிருந்து இன்று வரை எந்தவிதமான எழுத்தாலான புரிந்துணர்வு உடன்படிக்கைகள் எவையும் இல்லாமல் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இயங்கி வருகின்றது.

அதற்காக நாம் ஐந்து கட்சித் தலைவர்களுக்கும் முதற்கண் பெரும் நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளோம். ஆனாலும் அவர்களைப் பிரிந்து போகாமற் பிணித்து வைத்திருக்கும் கயிறு எது என்றால் 2009 மே மாதம் வரைக்கும் அக் கயிறு தமிழர்களின் ஆயதப் போராட்ட அமைப்பாகவும் அதன் பின் தமிழ் மக்களின் அசைக்க முடியாத வாக்குப் பலமாகவுமே உள்ளது.

காலத் தேவையின் பால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைத் தனிக்கட்சியாகப் பதிவு செய்ய வேண்டிய தேவைகள் எழுந்துள்ளன என்பது மறுக்க முடியாத உண்மையே. ஏனெனில் தற்போதுவரை இலங்கையிற் கோலோச்சும் அரசினால் உடைத்துப் பிரிக்க முடியாத அமைப்பாக அல்லது அரசியற் குழுமமாக ஒன்றேயொன்று உண்டென்றால் அக் குழுமம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே! அக்கட்டமைப்பை மேலும் வலுவாக்க வேண்டும் என்றால் அவ் அமைப்பு தனிக் கட்சியாகப் பதிவு செய்யப்படுதல் காலக் கட்டாயம் ஆகும்.

எனவே தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தனிக்கட்சியாகப் பதிவதற்கு . முதலாவதாகத் தேவைப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை உருவாக்கும் முயற்சியைத் தன்து மாநாட்டில் டெலோ அமைப்பு கோடிட்டுக் காட்டியுள்ளது.

உடன்படிக்கையொன்றில் சிறிது காலம் இயங்கும் போதுதான் அதன் நெளிவு சுளிவுகளுக்கேற்ப விட்டுக் கொடுத்தும், இறுக்கிப் பிடித்தும் கட்சிகள் செயலாற்றத் தொடங்கி ஒரு நிலையில் உன்னதமான புரிந்துணர்வும் ஒன்றாகிய மனநிலையும் உருவாகும். அதுவரை செயற்பாடுகளைப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஊடாகக் கொண்டு நகர்த்துதல் என்பது தந்திரோபாயமான முடிவாகவே உள்ளது.

முதலில் உடன்படிக்கைக்கும் ஒப்பந்தத்திற்கும் இடையிலான வேறுபாட்டைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒப்பந்தம் என்பது சட்டரீதியாக தரப்பினரைக் கட்டுப்படுத்தும் பண்பைக்கொண்ட இறுக்கமான எழுத்தாலான ஆவணம் ஆகும். ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு அதன் இறுதியில் கையொப்பமிடுபவர்கள் அதன பின் அவ் ஒப்பந்தச் சரத்துக்களுக்கு இணங்கியொழுக வேண்டிய சட்டக் கடப்பாட்டைக் கொண்டமைகின்றனர்.

ஆனால் உடன்படிக்கை என்பது ஒரு புரிந்துணர்வில் சேர்ந்தியங்க முன்வரும் செயற்பாடாகும். உடன்படிக்கை வாய்மொழியிலோ, நடத்தையிலோ, எழுத்திலோ அமைந்திருக்கலாம். ஆனால் உடன்படிக்கையின் சரத்துக்களை உந்தச் சந்தர்ப்பத்திலும் மாற்றியமைக்க முடியுமாக இருப்பதுடன் அதன் சரத்துக்கள் உடன்படிக்கையில் இயங்குபவர்களைச் சட்டப்படி கட்டுப்படுத்தாது.

எனவே தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தனியான கட்சியாகப் பதிவு செய்து எழுத்தாலான ஒப்பந்தமொன்றை உருவாக்க முன் அவ் ஒப்பந்தங்களில் இடப்படவேண்டிய சரத்துக்களைக் சரியாகத் துணிந்து கொள்வதற்கு முதலில் உடன்படிக்கையொன்றில் செயற்படுதல் மிகத் தந்திரோபாயமான முடிவாக உள்ளது.

ஆனால் இத் தந்திரோபாய முடிவினை அறிவித்த டெலோ அமைப்பின் அடுத்த அறிவிப்பு பெரும் நெருடல் ஒன்றை ஏற்படுத்தி விட்டுள்ளது. அத்துடன் சில உண்மைகளையும் சொல்லாமற் சொல்லி நிற்கின்றது.

அந் நெருடல் மிகுந்த அறிவிப்பு யாதெனில் ஆரம்பக் கட்டப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு உடனடியாக உள்வாங்கப்படப் போகும் கட்சிகளில் தமிழரசுக் கட்சி சேர்க்கப்படவில்லை என்பதே.

இவ் அறிவிப்பு சொல்லாமல் சொல்லியிருக்கும் செய்தி யாதெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தனிக் கட்சியாகப் பதிவு செய்யத் தமிழரசுக் கட்சி ஆர்வமற்று இருக்கின்றது என்பதைத்தான்.

அத்துடன் தனிக்கட்சியாகப் பதிவுசெய்வதிலுள்ள இழுபறி நிலைகளை நீக்குவதங்கு மதிப்பிற்குரிய ஆண்டகை இராயப்பு ஜோசப் அவர்களின் மத்தியஸ்தத்துடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் பேச்சுக்களில் ஈடுபட டெலோ தயாராகி விட்டது என்ற அறிவிப்பினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தனிக் கட்சியாகப் பதிவு செய்யத் தமிழரசுக் கட்சி தடையாகவும் உள்ளதான அர்த்த வெளிப்பாட்டை சொல்லாமற் சொல்லியது போல்தான் உள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் புலிகளின் தலைமை உருவாக்க முனைந்த போதே அக் கூட்டமைப்பு தனியே ஓர் பலம் பெற்ற அமைப்பாக உருவாகக் கூடாது என்பதில் இவர்கள் கவனம் செலுத்தியிருந்தனர் என்பது வெளிப்படையானதே. ஏனெனில் தமிழர்களுக்கான தனித் தலைமைத்துவமாக, அது ஆயுதத் தலைமைத்துவமாக இருந்தாலென்ன அல்லது அரசியல் தலைமைத்துவமாக இருந்தாலென்ன, தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே இருக்க வேண்டும் என்ற கொள்கையை அவர்கள் கொண்டிருந்ததால் காலத் தேவைக்கேற்பப் புரிந்துணர்வுடன் இயங்கக் கூடிய அமைப்பாக மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அவர்கள் உருவாக்கினார்கள்.

அதனால்தான் மே மாதம் 2009 வரை சுமார் 8 வருடங்களாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனிக்கட்சியாகப் பதியப்படாமல் இருந்தது.

ஆனால் தற்போது அக் கூட்டமைப்பு தனிக் கட்சியாகப் பதியப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

அதற்கான தடைக்கல்லாகத் தழிரசுக் கட்சி இருக்கின்றதா என்பதே எம் முன்னுள்ள கேள்விகள் ஆகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனிக் கட்சியாகப் பதிய வேண்டும் என்ற நிலைப்பாட்டை முன்னின்று செயற்படுத்த வெண்டிய பொறுப்புக் கொண்டுள்ள கட்சியாகத் தமிழரசுக் கட்சியே காணப்படுகின்றது. ஆனால் அப் பொறுப்பிலிருந்து அக்கட்சி வழுகுவதற்குக் கடுமையான காரணங்களை அக்கட்சியால் முன்வைக்க முடியாமல் உள்ளது.

> **தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தனிக் கட்சியாகப் பதியத் தமிழரசுக் கட்சி ஆர்வமற்றுள்ளதா?**

அக் கட்சியின் மாவட்டத் தலைவர் ஒருவர் இவ்விடயம் பற்றிக் கேட்டபோது "அதற்கு இன்னும் காலம் தேவையாக உள்ளது. எடுத்தவுடன் கட்சியாகப் பதிய முடியாது" என்று தெரிவித்திருந்தார்.

இப் பதில் ஐ.நாவின் மனிதவுரிமைப் பேரவையில் இலங்கையின் அமைச்சர் மகிந்த சமரசிங்க "நல்லிணக்கத்தை ஏற்படுத்த இன்னும் காலம் தேவையாக உள்ளது" என்று அறிவித்ததற்குச் சமமாக இருந்தது.

எனினும் தமிழரசுக் கட்சியுடன் இணக்கத்தை ஏற்படுத்த டெலோ உட்பட ஏனைய அமைப்புக்கள் முயற்சிக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும்.

அண்மையில் கனடா நகரில் நாடு கடந்த தமிழீழ அரசின் முரசறைவிப்புக் கூட்டத்தொடரில் பேசிய அவ் அரசின் பிரதமரின் கூற்றுப்படி "மும்முனைப் புவிச்சரித அரசியல் களத்திலிருந்து தமிழர் பிரச்சனை நான்காவது முனைக்கு நகர்கின்றது. இந்தியா-சீனா-இலங்கை என்ற முக்கோணத்தை விட்டு நகர்ந்துள்ள தமிழரின் பிரச்சனையை சரியாகக் கொண்டு செல்ல ஒற்றுமைப்பட்ட தமிழரின் குரல் ஒலிக்க வேண்டும்" என்று வலியுறுத்தியிருந்தார்.

உலக அரங்கில் ஒற்றுமையை வலுப்படுத்த முயற்சிக்கும் வேளையில் உள்ளக அரங்கில் தமிழரசுக் கட்சியை இணைத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சி உருவாக வேண்டும் என்பதே "முள்ளிவாய்க்கால் சரத்தின்" முக்கிய அம்சமாகும்.

## எத்தனையோ அச்சங்கள்

அகன்ற கனத்து தடித்த
இரவொன்றில் மௌனித்து நிற்கும்
மரத்தின்
கீழிருந்து எழுகின்றது உன் பாடல்.
பாடல்கள் நானாகின்றேன்.
பயத்தை பயத்தால்
போக்கிட கறுப்பிலான உடைகளை
அணிந்திருக்கின்றாய்.
உன் பாடல்களின் ஆரவாரங்களில்
பஞ்சவர்ணகிளிகளின் கூடுகளில்
காகங்கள்
குடியேறுகின்றது.
ஓ!!
உன் கானம் நயாகராவின் தேனருவி
எனக்காகவே இசைக்கிறாய்.
என் வாழ்வின் எத்தனையோ
அச்சங்களுக்கு
அர்த்தம் சொல்கிறாய்.
உன் மின்மினி நிறத்திலான
பாடல்கள் அச்சமேற்கும்
இருளையெல்லாம்
வெளிச்சமாக்கின்றது.
தீப்பிடித்திருக்கும் என் தேசத்தின்
நெருப்பின் மீது
உன் பாடல் நீர் வார்க்கும்.
கொடும் சிறைகளின் அறையெல்லாம்
உன் பாடல்,
ஓ ! நீயொரு அற்புதமான பாடகன்.
ஆத்ம அச்சங்களையும்
பெரும் ஆன்மப் பசியையும் ஒழுகும்
உன் பாடலின்
தேன் துளிகளால்
துடைத்தெறிகின்றாய்.
கனத்து தடித்த கும்மிருட்டாய்
காணாமல் போன உன்னையும்
சேர்த்த கறுப்பு கவலைகளும்
இது விடியாத இரவா என்ற எனது
அச்சமும் இருளை இன்னும்
அடர்த்தியாக்குகின்றது.
அடர் இருளின் கோர நகங்கள்
கருவிழிகளை குத்துகின்றது.
பீறிடும் துளிகளிலும் உன் கறுப்புக்
கவலைகள்தான்.
உழிழ் நீர் ஊறின உன்
முத்தங்களுக்காக
எத்தனையோ கறுப்பு இரவுகளில் வாய்
பிளந்து நிற்கின்றேன்.
நாம் கட்டிக் காத்த காதல்
அரண்மனைகளில் புதங்களை
குடியேற்றி விட்டார்கள்.
எனக்கே சொந்தமான உன்
ஆன்மாவை தொலைந்துவிட்டது.
இறந்தக் காலத்தை உறிஞ்சிக்
கொண்டு நீ மட்டும்
பயணித்துவிட்டாய்.
மீண்டும் இரவுகள் தீப்பிடிக்கின்றன.
எத்தனையோ அச்சங்கள் மீது ஒரு
கணம் காறி உமிழ்கின்றேன்.
இனவாத சமூகவாத ஆதிக்கவாத
நிறங்களாவது
கழுவி வெளுக்கட்டும்
பேரன்பே!!

எஸ்தர் விஜித் நந்தகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிக்கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு?...

இவ்விடயம் தொடர்பாக திருமலை மாவட்ட தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. துரைரெட்ணசிங்கம் தனது கருத்தை மலைமுரசிற்குத் தெரிவிக்கையில் "தமிழரசுக் கட்சி எக்காலத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிதைவுக்குக் காரணமாக இருக்காது.'' என உறுதி படத் தெரிவித்தார். மேலும் ஏன் டெலோவின் மாநாட்டில் தமிழரசுக் கட்சியைத் தவிர்த்து ஏனைய நான்கு கட்சிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைச் செய்ய முயற்சிக்கின்றன எனத் தமக்குத் தெரியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

" இவ்வாறு ஏன் டெலோ தலைவர்கள் எம்மை விட்டு விட்டுச் செல்கின்றார்கள் என்பதற்கான பதிலை அவர்களே தர வேண்டும். தமிழரசுக் கட்சியினரான நாமும் நமது தலைமையும் ஏனைய நான்கு கட்சிகளும் எம்மைவிட்டுப் பிரியாது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையை வைத்திருக்கின்றோம். எமது இக் கூட்டமைப்பு மட்டுமே தற்போது ஆட்சியிலுள்ள அரசால் உடைக்கப்பட முடியாத உறுதியான அமைப்பாக உள்ளது. ஏனைய அனைத்துக் கட்சிகளையும் உடைத்தழித்துள்ள ஆளும் கூட்டமைப்பு பல்வேறு விதமான தந்திரோ-பாயங்களை எமது கூட்டமைப்பை உடைத்துவிடுவதற்காக ஏவிக்கொண்டே உள்ளது. அவ்வாறு ஏதும் பிளவுகள் நிகழுமாயின் ஈழத் தமிழர்கள் பலர் தற்கொலை செய்துகொள்வர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழ் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை ஆகும். 2009ம் ஆண்டில் தமிழரின் போராட்டத் தலைமை அழிந்தவுடன் மக்கள் தமக்காக ஏற்றுக்கொண்ட அரசியற் தலைமையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு" என்றார் அவர்.

வடமாகாணத் தேர்தலுக்கு முன் தமிழரசுக் கட்சி ஏனைய கட்சிகளுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்வது சாத்தியமானதா? என வினவியபோது நினைத்தவுடன் கட்சியாகப் பதிவதென்பது சாத்திமற்றது என்பதுடன் அவ்வாறு வடமாகாணத் தேர்தலுக்கு முன் பதிவது சாத்தியமற்றது என்றே தமிழரசுக் கட்சி நம்புவதாக திரு. துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார்.

27.04.2013 சனிக்கிழமை மாலை திருகோணமலையில் நடைபெற்ற தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) மாநாட்டின் போதே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மத்திய குழுவினால் தீர்மானிக்கப்பட்ட விடயங்கள் வெளியிடப்பட்டன. அத் தீர்மானங்கள் உட்படக் கலந்துரை யாடப்பட்ட விடயங்கள் வருமாறு:

- தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக உழைக்கக்கூடிய அரசியல் கட்சிகள், தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற பெயரில் இயங்கி வந்தாலும் இலங்கை தேர்தல் திணைக்களத்தில் ஒரு அரசியல் முன்னணியாகவோ தனி அரசியல் கட்சி-யாகவோ பதிவு செய்யப்படவில்லை.
- பதிவு செய்வதற்கான இழுபறி நிலைகளை நீக்குவதற்கு மன்னார் இராஜப்பு ஜோசப் ஆண்டகை தலைமையிலான புத்திஜீவிகள், சிவில் சமூகம் எடுக்கும் முயற்சிகளுக்கு பூரண ஆதரவை வழங்குவது எனவும் இலங்கை தமிழரசுக் கட்சியுடன் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் நேரடி பேச்சுவார்த்தைகளை நடத்தி சுமுக நிலைகளை எட்டுவதற்காக முழு முயற்சிகளை எடுக்க வேண்டும்.
- ஏனைய கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப், புளோட் ஆகிய கட்சிகளுடன் ஒற்றுமையை பலப்படுத்த முழு முயற்சிகள் இரு வாரங்களுக்குள் எடுக்க வேண்டும்.
- இந்த முயற்சிகள் வெற்றி பெறமுடியாத சூழ்நிலையேற்படுமிடத்து இதுவரை இணக்கம் கண்டுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப், புளோட், டெலோ ஆகிய நான்கு கட்சிகளும் இணைந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற பெயரில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் விரைவில் ஒரு முன்னணியாக, தனி அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட வேண்டும்.
- தமிழ் தேசிய கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டதன் பின்னர் இதில் சேர விரும்பும் தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தக்கூடிய ஏனைய கட்சிகளையும் இணைத்து தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் தீர்வொன்றை வென்றெடுக்க வேண்டும்" என்ற முக்கிய முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

## மீளக்குடியமர்த்தவும்..

எடுக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித்-தலைவர் சி. தண்டாயுதபாணி தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் மற்றும் பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமை ஆகியோரின் இணைத்தலைமையின் கீழ் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

அந்த கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"2006 ஆம்ஆண்டு சம்பூர் பிரதேசத்திலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டதை தொடர்ந்து அவர்கள் வாழ்ந்த 9600 ஏக்கர் நிலம் உயர்பாதுகாப்பு வலயம் என்று அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டது.

இப்பொழுது உயர்பாதுகாப்பு வலயம் என்ற பேச்சுக்கு பதிலாக பொருளாதார ஊக்குவிப்பு வலயம் என்றழைக்கப்படுகின்றது.

அனல் மின்னிலையம் அமைப்பதற்காக 540 ஏக்கர் காணியும் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்காக 818 ஏக்கர் காணியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆகவே, எஞ்சியுள்ள காணிகளில் இடம்பெயர்ந்து வேதனைகள் மத்தியில் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 1086 குடும்பங்-களையும் மீளக்குடியமர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## இலங்கையில் மனித உரிமைகள் 2012ல் அபிவிருத்தி அடைந்துள்ளது

மனித உரிமை தொடர்பாக அறிக்கை விட்டுள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களம் இலங்கையின் மீது கடும் குறைகளை கூறியுள்ள வேளையில் மனிதஉரிமை விடயங்களில் இலங்கை 2012ல் விருத்திப் போக்கிலே உள்ளது என கொத்தலாவ பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் சட்ட பீட தலைவர் கலாநிதி மஹாநாம ஹேவா தெரிவித்துள்ளார். 2012ஆம் ஆண்டானது சட்டரீதியற்ற தடுத்து வைப்பு, தாக்குதல்கள் போன்ற இன்னோரன்ன மனித உரிமை மீறல்கள் குறைந்துள்ள ஆண்டாகவே உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## கந்தளாயில் பெய்தது மஞ்சள் மழையா?

2.5.2013 அன்று மாலை 5 மணியளவில் கந்தளாயில் பெய்த மழை மஞ்சள் நிறமாக இருந்ததனால் மக்கள் சற்று பீதியடைந்திருந்ததாக அங்கிருந்து கிடைத்த தகவல் தெரிவிக்கின்றது.

கடுமையான வெப்பநிலையை திருகோணமலை அனுபவிக்கும் இக்காலத்தில் திடீரென பெய்த மழையானது மஞ்சள் நிறமாக பெய்ததால் அம் மழை நச்சுத் தன்மை வாய்ந்ததாக இருக்குமோ? என கந்தளாய் பிரதேச மக்கள் அச்சமடைந்துள்ளனர். எனினும் நீண்ட நேரம் இம் மழை பெய்யவில்லையாம்.

## உயிரைக் கொடுத்தாயினும்..

போதுமான வளங்கள் இன்று நிறையவே காணப்படுகின்றது. அதனால் வென்றெடுக்க முடியும்.

இன்னும் உங்கள் உரிமைகளை வென்றெடுக்கும் பாரிய முயற்சிக்கு என் உயிரை கொடுத்தாவது நான் உங்களுக்கு உதவி செய்ய கடமைப்பட்டுள்ளேன்" என நகரபிதா தெரிவிக்க வருகை தந்திருந்த மேன் முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் நியாஸ் தொழில் தருநருக்கும் . தொழிலாள-ருக்கும் இடையேயான விடயங்களை தெளிவுபடுத்தியதோடு தொழிலாள-ருக்கான உரிமைகளையும் அது எவ்வாறு நசுக்கப்படுகிறது. தொழில் தருநர்கள் அவற்றை எவ்வாறு தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றார்கள் என்பதை தெளிவுபடுத்தினார். இச்சந்திப்பின் இறுதியில் தொழிலாளர் உரிமைக்கான 10 பேர் கொண்ட குழுவும் தெரிவு செய்யப்பட்டதோடு குறித்த சந்திப்பின் உரிமை விடயத்தை உடன் நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப் பட்டது. இச்சந்திப்பின் போது பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் பிரத்தியேக செயலாளர் ரைசுதீன் மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமைபுரியும் தொழிலாளர்கள் பலரும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சிறுவன் படுகாயம்..

ஈச்சிலம்பற்றுப் பிரதேச வைத்தியசாலையின் கடமை வைத்தியர் பாக்கியதுரை வடிவுக்கரசி தெரிவித்தார்.

வெருகல் துவாரகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கோட்ட மட்ட விளையாட்டு நிகழ்ச்சியில் பங்குபற்றி விட்டு சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, மடுப்பாலத்தடியில் வைத்து பிரதேச சபையின் வாகனத்துடன் குறித்த மாணவன் மோதுண்டுள்ளார்.

காயமடைந்த மாணவன் ஈச்சிலம்பற்று செண்பகா மகா வித்தியாலயத்தில் 8ஆம் தரத்தில் கல்வி கற்கும் 13 வயதுடைய வீரசிங்கம் தினேஸ் என்பவராகும் என பாடசாலை அதிபர் வி. அருள்நேசராஜா தெரிவித்தார்.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெருகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## லேடி ரிஜ்வே குழந்தை வைத்தியசாலையில் முன்பள்ளிப் பிரிவு

கொழும்பிலுள்ள லேடி ரிஜ்வே குழந்தைகள் மருத்துவமனைக்கு நாடெங்கிலும் இருந்து வைத்தியம் செய்வதற்காகப் பல குழந்தைகள் வந்து போவதுடன் அவர்களிற் சிலர் பல நாட்கள் அங்கு தங்க வேண்டிய சூழ்நிலையும் இருப்பதால் அக் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டு-வதற்கான முன்பள்ளிப் பிரிவொன்றை அவ் வைத்திய சாலையில் நிறுவ அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

5வயது தொடக்கம் 12 வயதுக் குழந்தைகளுக்கு வைத்தியசாலையி-லேயே வைத்துக் கல்வி புகட்டு-வதற்கென உருவாகும் இவ் அலகில் தமிழ் ஆசிரியர் ஒருவர் உட்பட மொத்தம் ஐந்து ஆசிரியர்கள் பணியாற்றவுள்ளனர்.

இவர்கள் டிப்புளோமாப் பட்டம் பெற்றவர்களாக இருப்பர் என்று தனது அமைச்சரவைக்கான முன்மொழிவில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

## கிறிஸ்மஸ் தீவில் உயிரிழப்பு

இலங்கையை சேர்ந்த 35 வயதான புகழிடக் கோரிக்கையாளரான மட்டக்களப்பை சேர்ந்த ஒருவர் சுகயீனமடைந்து பாஸ்பேட் ஹில் செயலாக்கப் பகுதியிலிருந்த வைத்திய சாலைக்கு கடந்த புதன்கிழமை அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே உயிரிழந்துள்ளதாக குடிவரவு திணைக்களம் இன்று தெரிவித்துள்ளது.

## காவல்துறை மீது நடவடிக்கை..

திருகோணமலை நகர காவல்துறையினர் தெரிவித்தனர்.

கடந்த 2008 ஆண்டு இப்பிரதேசத்தில் உள்ள காட்டுப் பகுதியில் 6 பேர் விறகு எடுப்பதற்காக சென்ற நிலையில் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்-பட்டது. இதன்போது 5 பேர் சம்பவ இடத்தில் கொல்லப்பட்டதுடன் ஒருவர் காயமடைந்தார். காயமடைந்த நபரால் தம்மை துப்பாக்கியால் சுட்டவர்கள் காவல்துறையினரே என முறைப்பாடு செய்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை இடம்பெற்று வருகிறது.

இந் நிலையில் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் நேற்று மாலை தம்பலகாமர் காவல்துறை நிலையத்தில் கடமையாற்றிவரும் ஒருவர் சேருவில காவல்துறை நிலையத்தில் கடமையாற்றிவரும் இருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

## பிரதம ஆசிரியரின் வீடு..

ஆவணங்களில் இருந்த விடயங்கள் எவ்வாறு வெளிவந்தன என்பது பற்றி காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டனர். எனினும் அப்பிரதம ஆசிரியர் எவ்வாறு இத்தகவல்கள் வெளியாகின என்பதை காவல்துறையினருக்கு தெரிவிக்க மறுத்துவிட்டார். 1999 மார்ச் மாதத்தில் சிறிலால் பிரியந்த கடத்தப்பட்டு தாக்கப்பட்டு நடுத்தெருவில் வீசியெறியப்பட்டிருந்தார். 2000ஆம் ஆண்டில் காவல்துறையினரால் கைது செய்யப்பட்ட இவர் சில காலங்கள் தடுத்து வைக்கப்பட்டும் இருந்தார். இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் இரு தடவைகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இரகசிய உளவாளிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுமிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அறிந்துகொள்ளுங்கள்

### சார்லஸ் பாபேஜ்



பிரித்தானிய கணிதவியலாளரும் கண்டுபிடிப்பாளருமான இவர் 1822 இல் திட்டமிட்டபடி வேறுபாட்டு இயந்திரத்தினை (Difference Engine) இனை வடிவமைத்தார். அதுவே இப்போது நாம் பயன்படுத்தும் இலத்திரனியல் கணனிக்கு அடிப்படையான செயலியுடன் கூடிய உள்ளீட்டு வெளியீட்டு சாதனங்கள் பயன்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்ட முதன்மை இயந்திரமாகும். இதனாலேயே கணனியின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

*சார்ல்ஸ் பாபேஜின் கண்டுபிடிப்புகள்*

- ◆ புகையிரதத்தின் தைனமோ மீற்றர்
- ◆ நியமத் தொடரூந்துப் பாதை (Railway track) அளவுக்கருவி
- ◆ சீரான அஞ்சல் கட்டண முறை
- ◆ கலங்கரை விளக்கு ஒளி
- ◆ கிறீன்விச் ரேகைக் குறியீடு
- ◆ சூரிய ஒளி கொண்டு கண்களைச் சோதிக்கும் கருவி

பிறப்பு - டிசம்பர் 26, 1791 - லண்டன்

இறப்பு - அக்டோபர் 18, 1871

நிறுவனம் - ரினிடி கல்லூரி, கேம்பிரிட்ஜ்

## குழந்தைகளை ஏன் விளையாட விட வேண்டும்?

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், ஆயுள் கிட்டுவதும், மாரடைப்பு போன்ற நோய்கள் வராமலிருப்பதும் விளையாட்டுடனும் உடற்பயிற்சி-களுடனும் தொடர்புடையன. இவற்றால் உடல் வலுப்பெறுகிறது. உளநிலை சிறக்கிறது. சமூகத்துடனான உறவும் நெருக்கமும் அதிகரிக்கின்றன. அத்துடன் அவர்களால் • தங்கள் எடை அதிகரிப்பதைக் கட்டுப்படுத்த முடியும். • இரத்த அழுத்தம் அதிகரிப்பதைத் தடுக்க முடியும். • நல்ல கொலஸ்டரோலான HDL லை அதிகரிக்க முடியும். • நீரிழிவு ஏற்படுவதற்கான சாத்தியத்தைக் குறைக்கலாம். • சில வகை புற்று நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியம் குறையும். • மனநிலை உயரும், தன்னம்பிக்கை வளரும்.

அவர்களுக்கு பெற்றோராகிய நீங்கள் கட்டாயம் உதவ வேண்டும்.

உடற்பயிற்சியிலும் உடல் உழைப்பிலும் ஈடுபடுவது பிள்ளைக்குத் தண்டனை போல இருக்கக் கூடாது. மகிழ்ச்சி அளிக்கும் வகையில் ஆரம்பித்தால் நிச்சயம் ஆர்வத்துடன் பங்கேற்பார்கள். பெற்றோராகிய தாங்கள் முன்மாதிரியாக இவற்றில் ஈடுபட்டால் மட்டுமே குழந்தைகளுக்கும் இவற்றில் ஆர்வம் ஏற்படும். விளையாட்டிலும் பொழுது போக்குவது போன்ற உடலுழைப்பிலும் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். எப்பொழுதும் ஒரே விளையாட்டிலேயே ஈடுபடாமல் பல்வேறு விதமான விளையாட்டுக்களில் ஈடுபடுவது நல்லது. பிள்ளைகளை ஓடியாடி விளையாட விடுவதனால் அவர்களது அறிவு வளர்ச்சி மட்டுமன்றி உடல் வளர்ச்சியும் ஏற்படும்.

## பதுறுதீன் புலவர்

நமது ஈழத்திருநாட்டில் காலத்தால் அழியாத படைப்புகளை தந்த புலவர்கள் பலர். அவர்களுள் இஸ்லாமியப் புலவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஈழநாட்டின் புலமை வரலாறு பூதந் தேவனார் முதல் இன்று வரை விரிந்து செல்கிறது. இதே போன்று ஈழத்தில் தோன்றிய இஸ்லாமியப் புலவர்களின் வரலாறும் சிறப்புக்குரியது. ஈழத்தில் மட்டுமன்றித் தமிழகத்திலும் இவர்கள் பெரிதும் மதிக்கப்பட்ட பெருமைக்குரியவர்களாகத் திகழ்ந்துள்ளனர். ஈழத்தில் தோன்றிய இஸ்லாமியப் புலவர்களுள் அப்துல் காதிறுப் புலவர்: யாழ்ப்பாணம், அசனார் லெவ்வைப் புலவர், யாழ்ப்பாணம் பதுறுதீன் புலவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள். இவர்களின் பணிகள் காலத்தால் அழியாதவை.

ஈழத்திலும் தமிழகத்திலும் போற்றி மதிக்கப் பெற்ற பெரும் புலவர் யாழ்ப்பாணம் பதுறுத்தீன் புலவராவார். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் வாழ்ந்தவர். இவர் இயற்றிய முகைதீன் புராணம் இவருக்கு அழியாத சிறப்பினை ஈட்டிக் கொடுத்துள்ளது. ஈழத்தில் தோன்றிய முதல் இஸ்லாமியக் காவியம் இதுவெனவும் கூறப்படுகிறது. நபிகள் நாயகத்தின் பேரனாரும் சிறந்த அறிஞருமான முகைதீன் அப்துல் காதர் ஜெய்லானி என்பவரைக் காவியத் தலைவராகக் கொண்டு இப்புராணம் இயற்றப் பெற்றுள்ளது.

பதுறுதீன் புலவரின் கவிப்புலமையை இப்புராணத்தில் நன்கு காணமுடிகிறது. இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இப்புராணம் தக்கதோர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

முகைதீன் புராணத்தின் முதற் பாகத்தில் நாற்பது படலங்களும் இரண்டாயிரத்து நூறு விருத்தப்பாக்களும் அடங்கியுள்ளன. இரண்டாவது பாகத்தில் முப்பத்து நான்கு படலங்களும் ஆயிரத்து எழுநூறு விருத்தப்பாக்களும் இடம்பெற்றுள்ளன. இப்புராணத்தில் யாழ்ப்பாணத் தமிழ் வழக்குச் சொற்கள் பலவும் பரவிக் காணப்படுகின்றன.

முகைதீன் புராணம் வெளிவருவதற்குக் காரணமாயிருந்த யாழ்ப்பாணம் செய்கு மீரான் என்பவரைப் புலவர் பாயிரச் செய்யுள்களில் மிக்க நன்றியுடன் குறிப்பிட்டுள்ளார். பாடல்களில் அழகிய வருணனைகளும் கற்பனைச் சிறப்புக்களும் காணப்படுகின்றன. இப்புலவரின் கவியாற்றல் குறித்துத் தமிழகத்தைச் சேர்ந்த கோட்டாறு செய்குத் தம்பிப் பாவலர் பின்வருமாறு கூறியுள்ளார்.


"பதுறுதீன் புலவர்" அவர்கள் சாந்தமும், பொறுமையும், தயவும், தெருட்சியும் தரக்கூடிய எல்லா வகையான நூல்களையும் கற்றுத் தெளிந்த கவிபாடும் வல்லவர்கள் எல்லோரும் தோற்றோடும் வண்ணம் விடை தரவல்லவர் என்றும், மேகம் பொழிகின்ற இயல்பைப் போன்ற கவி பொழியும் கவிராசர் அவர் என்றார்.

இக்கூற்று பதுறுத்தீன் புலவரைப் பொறுத்தவரையில் முற்றும் உண்மையே. கவிமழை பொழியும் மேகமாகவே அவர் விளங்கினார். அதனாற்தான் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் அழியா இடம்பெற்ற பெரும் புலவர்களுள் ஒருவராக விளங்குகிறார். அவரது முகைதீன் புராணமும் தனிப்பாடல்களும் உள்ளவரை அவரது நாமம் நின்று நிலைக்கும் என்பதில் ஐயமில்லை.

*ஆக்கம்: ஸ்ரீ. ரட்சிகா (9 - பீ பிரிவு)*
*திஉவர்மலை விவேகானந்தா கல்லூலரி*




## பாதங்களை அழகாக்கும் சில வீட்டுப் பொருட்கள்



உடல் அழகாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் ஒரு சில உடற் பராமரிப்புகளை மேற்கொள்ள வேண்டும். அதிலும் முகம், கழுத்து, கை, கால் மற்றும் கூந்தல் இவற்றிற்கு முக்கியமாக சிறந்த பராமரிப்பைச் செய்யவேண்டும். பாதங்களைப் பாதுகாக்க வீட்டிலுள்ள சில பொருட்களே போதுமானது ஆகும். எலுமிச்சை, இது கருமையான சருமத்தை வெள்ளையாக்க பயன்படக்கூடியது. எலுமிச்சைச் சாற்றை முழங்கை, முழங்கால், தோள்பட்டை, பாதம் போன்ற இடங்களுக்கு பூசி மசாஜ் செய்து சிறிது நேரத்தின் பின்னர் கழுவிவர வேண்டும். எலுமிச்சைச் சாறானது இறந்த செல்களை, நீக்கி பொலிவு தரும். அடுத்து கடலை மாவு, பெண்கள் பொலிவோடு இருப்பதற்கு கடலைமாவு மிகவும் முக்கியமானதாகும். கடலை மாவுடன் மஞ்சள்தூள், தயிர் மற்றும் எலுமிச்சைச் சாறு சேர்த்து பேஸ்ட் செய்து பாதங்களில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். மற்றும் பாதங்கள் வறட்சியுடன் பார்ப்பதற்கு கடினமாக இருப்பதற்கு பாதங்களில் எண்ணெய் சுரப்பி இல்லாததே ஆகும். எண்ணெயை வெதுவெதுப்பாக சூடேற்றி பாதங்களில் தடவி மசாஜ் செய்து வருவதனால் பாதங்கள் எண்ணெய் பசையோடு இருப்பதுடன் கால்களில் உள்ள இறந்த செல்கள் நீங்கி பொலிவு பெறும். அதிலும் நல்லெண்ணெய் பாவிப்பது சிறந்த பெறுபேற்றைத் தரும்.

கற்றாழை, இதில் எண்ணற்ற நன்மைகள் அடங்கியிருக்கின்றன. இதன் ஜெல்லை பழுப்பு நிறத்தில் இருக்கும் இடங்களில் தேய்த்து சிறிது நேரம் கழித்து கழுவவேண்டும். குளிப்பதற்கு முன் தேங்காய்த் தண்ணீரை(இளநீர்)பழுப்பு நிறமான இடங்களில் தடவி 10 தொடக்கம் 15 நிமிடங்கள் வரை மசாஜ் செய்து வருதலும் பாதங்களை மிருதுவாக்கும். தினமும் காய்ச்சாத பாலை குளிப்பதற்கு முன் பாதங்களில் தடவி 10 நிமிடம் மசாஜ் செய்து, பின் குளித்தால், பாதங்களில் இருக்கும் கருமை நிறம் போய்விடும். உருளைக்கழங்கு சாற்றையோ அல்லது அதன் ஒரு துண்டையோ பாதங்களில் கருமையாக இருக்கும் இடங்களில் தேய்த்து சிறிது நேரம் கழித்து பின் குளிர்ந்த நீரில் அலச வேண்டும். வெள்ளரிக்காய் உடலுக்கு குளிர்ச்சியையும் புத்துணர்ச்சியையும் தரக்கூடிய காய்கறியாகும். இதனை பாதங்களில் தேய்த்தால் பாதங்கள் அழகாய் புத்துணர்ச்சியோடு மின்னும்.

## தேங்காய் கொக்கீஸ்

*தேவையான பொருட்கள் :*

தேங்காய்ப்பூ - 10 - 12 மே.க, சீனி - 3மே.க, முட்டை வெண்கரு - 1, வனிலா - 1மே.க, கலரிங் - 1தே.க, சிறிதாக் வெட்டிய கஜு - 2மே.க, பிளம்ஸ் - அளவாக, மாஜரின் - 1தே.க

*செய்முறை :*

முட்டையின் வெண்கருவைத் தனியாக எடுத்துப் பாத்திரத்தில் இட்டு சீனியும் சேர்த்து நுரை பொங்கும் வண்ணம் நன்றாக பீற்றரால் அடித்துக் கொண்ட பின்பு கலரிங், வனிலா என்பவற்றைச் சேர்த்துக் கொள்ளவும். பின்பு இவ் அடித்த கலவையில் தேங்காய்ப்பூவைச் சிறிது சிறிதாகத் தூவி முழுவதுமாகச் சேர்த்து அதனுள் கஜுவுமிட்டு பிசைந்து வைத்துக் கொள்ளவும். பின்னர் கேக் தட்டிற்கு ஒயில் பேப்பர் இட்டு மாஜரின் பூசிக் கொண்ட பின்பு தயாரித்து வைத்துள்ள கலவையைத் தேசிப்பழமளவு உருண்டைகளாகப் பிடித்து இரண்டு உள்ளங்கைகளுக்கும் நடுவே வைத்து மெதுவாக அமர்த்தி, நடுவில் பிளம்ஸ் பதித்துக் கேக் தட்டில் இடைவெளி விட்டு அடுக்கி பேக் செய்து ஆறிய பின்னர் பரிமாறலாம்.



## கிழங்குக் கோழி வறுவல்

*தேவையான பொருட்கள் :* கோழி இறைச்சி - 1கி.கி, உருளைக்கிழங்கு - அரை கி.கி, தேங்காய்ப் பால் - 1 தம்ளர், சிலி கார்லிக் சோஸ் - 2மே.க, மிளகுத் தூள் - அளவிற்கு, உப்புத்தூள் - அளவிற்கு, மாஜரின் - 50கி, சலட் இலை - 5-8 துண்டுகள், தக்காளிப்பழம் - கால் கி.கி, சீஸ் துருவல் - 50கி, றஸ்க் தூள் - 100கி, பம்பாய் வெங்காயம் - 2

*செய்முறை :* முதலில் வெங்காயத்தை சிறு சிறு வடிவில் வெட்டியெடுக்கவும். இறைச்சியைப் பெரிய துண்டுகளாக வெட்டி உப்பிட்டு அவித்து நார் வடிவில் கிழித்தெடுத்து சிலி கார்லிக் சோஸ் புரட்டி வைத்துக் கொள்ளவும். உருளைக்கிழங்கை நன்றாக அவித்துக் கிறைண்டரிலிட்டு பால் விட்டு அடித்தெடுத்துக் கொள்க. பின்பு அதனுள் அளவிற்கு உப்பு, மிளகுத் தூள் என்பவற்றைச் சேர்த்துக் கொள்ளவும். பின்னர் தக்காளிப் பழத்தை வட்ட வடிவத்தில் வெட்டி வேறாக எடுத்து வைக்கவும். பின் சதுர வடிவான தட்டிற்கு மாஜரின் பூசிக் கொண்ட பின்பு றஸ்க் தூளைத் தூவி நன்கு பரவி அரைவாசி கிழங்குக் கலவையை ஊற்றி அதன் மேல் இறைச்சித் துண்டுகளைப் பரப்பி சலட் இலை, தக்காளிப் பழத் துண்டுகள், வெங்காயத் துண்டுகள் என்பவற்றைத் தூவி மிகுதிக் கிழங்குக் கலவையை ஊற்றி அதன்மேல் றஸ்க் தூள் பரவி மேலே சீஸ் தூள், மிளகுத்தூள் தூவி பேக் செய்து கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...



## The Sunday Times:

### ஏர்பஸ் விமானக் கம்பனியுடன் 315 பில்லியன் ரூபாய்க்குப் பேரம்

பெரும் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஶ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்திற்கு மேலும் 10 ஏர்பஸ் விமானங்களைக் கொள்வனவு செய்தற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இக் கொள்வனவிற்கான மொத்தச் செலவு இரண்டரை பில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளது. இலங்கை ரூபாவில் சுமார் 315 பில்லியன் ரூபாய்களாகும். இக் கொள்வனவிற்குள் ரோல்ஸ்ரோய்ஸ் ட்ரெண்ட் விமான எந்திரங்களுடன் கூடிய ஏ 330-300 ரக ஆறு விமானங்கள் 29.5 பில்லியன் ரூபாய்களுக்கும், ரோல்ஸ்ரோய்ஸ் எக்ஸ்.டபிள்யு. பி. ரக விமான எந்திரங்களுடன் கூடிய ஏ 350-900 ரக நான்கு விமானங்கள் 35.6 பில்லியன் ரூபாய்களுக்கும் மேற்பட்ட தொகைகளுக்கே கொள்வனவு செய்யப்படவுள்ளன. இக் கொள்வனவச் செலவிற்கும் மேலாக பராமரிப்பு மற்றும் உபகரணக் கொள்வனவிற்கு மேலும் பல பில்லியன் ரூபாய்களைச் செலவிட அரசு தயாராகி விட்டது. விமான சேவைகள் அமைச்சரின் முன்மொழிவை ஏற்றுக்கொண்ட அமைச்சரவை இக் கொள்வனவிற்கான ஆரம்பக்கட்ட நிதி ஒதுக்கீடாக ரூபாய் 10 பில்லியன்களை அனுமதித்துள்ளது.

எனினும் இக் கொள்வனவிற்கான நிதியை அரசு எங்கிருந்து பெற்றுக்கொள்ளப் போகின்றது என்பது தெளிவில்லாமலே உள்ளது.

உலகின் மிகப்பெரிய விமான உற்பத்திக் கம்பனிகளான ஐரோப்பாவின் ஏர்பஸ் கம்பனியும் அமெரிக்காவின் போயிங் கம்பனியும் இவ் விமானக் கொள்வனவில் போட்டியிலிருந்தன.

மத்திய வங்கியின் 2012ம் ஆண்டின் அறிக்கைகளின் படி ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் சுமார் 20.5 பில்லியன் ரூபாய்கள் நட்டத்தை அவ்வாண்டில் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

### பேச்சுக்கள் முறிவு — தொடரூந்துச் சங்கம் பணிப்புறக்கணிப்புப் பாதையில் !!!

அரசுடனான பேச்சுக்கள் முறிவடைந்துள்ள நிலையில் அடுத்த கட்டமாக இருநாட் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தொடரூந்துச் தொழிற்சங்கம் முடிவெடுத்துள்ளது.

இப்பணிப் புறக்கணிப்பை நிறுத்த கடைசி நேர முயற்சிகளை போக்குவரத்து ஆமைச்சின் மேலதிகச் செயலாளர் மேற்கொண்டிருந்தார். சுமார் மூன்ற மணிநேரம் தொழிற்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுக்களின் போது பரிமாறப்பட்ட உறுதிமொழிகளை எழுத்தில் தருமாறு தொடரூந்துத் தொழிற் சங்கங்கள் விடுத்த வேண்டுகோளை அமைச்சின் செயலாளர் நிராகரித்தமையால் இந் நாற்பத்தெட்டு மணிநேரப் பணிப்புறக்கணிப்பு நிகழ்ந்துள்ளது.

### மசகெண்ணைக் கொள்வனவில் புதிய நடைமுறைகள்

மசகெண்ணைக் கொள்வனவு நடைமுறைகளில் பாரிய மாற்றங்களை பெற்றோலிய வளத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா மேற்கொண்டுள்ளார். இம்மாற்றங்களுக்குக் காரணம் யாதெனில் கடந்த காலங்களில் இலங்கைச் சந்தையில் தரம் குறைந்த பெற்றோல் பயன்பாட்டுக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அப் பெற்றோலுக்கான விலையும் அதகமாக இருந்ததே ஆகும் என அமைச்சர் தெரிவித்தார்.

இம்மாற்றங்களில் குறிப்பிடத் தக்கதாக மசகெண்ணை வழங்குனர்களில் பெரும்பாலானவர்களின் பெயர்களை நீக்கிவிட அமைச்சு தீர்மானித்துள்ளது. “யார் தொடர்ந்து மசகெண்ணையை வினியோகிக்கும் வலுவைக் கொண்டவர்களோ அவர்களையே வழங்குனர் பட்டியலுள் வைத்திருக்கத் தீர்மானித்திருப்பதுடன் அவர்கள் தரமான எரிபொருளை எப்போதும் வழங்கத் தயாராக இருக்க வேண்டும்” என்றும் தெரிவிக்கப்பட்டுளளது.

அத்துடன் வழங்குனர்களை மூன்று வகையாகப் பிரித்து அப் பிரப்பில் முதல் தரத்திலிருக்கும் கம்பனிகள் எண்ணைச் சுத்திகரிப்பை மேற்கொள்ளும் ஆற்றலைக் கொண்டவையாக இருப்பதுடன் அவ்வகை நிறுவனங்களிடமிருந்தே எண்ணை இறக்குமதி செய்ய விரும்புவதாகவும் தெரிகின்றது.

## The Sunday Observer:

### பொதுநலவாயத் தலைவர்களின் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டாம் என்ற கோரிக்கையை நிராகரித்தது — அவுஸ்திரேலியா —

நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவிருக்கின்ற பொதுநலவாயத் தலைவர்களின் கூட்டத்தொடரில் அவுஸ்திரேலியாவைக் கலந்து கொள்ள வேண்டாம் என்று எழுப்பப்பட்ட கோரிக்கையை அவுஸ்திரேலியா நிராகரித்தது. கலந்து கொள்ளாது விட்டால் எதிர்பார்ப்பதை விட எதிர் விளைவுகளையே அது ஏற்படுத்துமென அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப்கார் தெரிவித்துள்ளார். இவ்வாறு கலந்து கொள்ளாது விடும் பொழுது இலங்கை தனித்து விடப்படுவதுடன் தன்னிச்சையாகவும் செயற்பட ஆரம்பித்து விடும் என அவர் மேலும் தெரிவித்தார். எம்முன் உள்ள சவால் யாதெனில் மேலும் மேலும் இலங்கையின் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து நல்லிணக்கத்தை நாடு முழுவதும் ஏற்படுத்த வேண்டியிருப்பதே ஆகும் என அவர் தெரிவித்தார். இந்த வார ஆரம்பத்தில் முன்னால் அவுஸ்திரேலிய பிரதம மந்திரி மல்கம் பிராசர் உட்பட பலர் இக்கூட்டத்தொடரை அவுஸ்திரேலியா புறக்கணிக்க வேண்டும் என கோரியிருந்தனர்.

### எந்த ஒரு நாட்டின் அரசும் கூட்டம் நடக்கும் நாட்டை மாற்றச் சொல்லவில்லை — கமலேஷ் சர்மா —

இலங்கையில் நடைபெறவுள்ள கூட்டத்தொடரை வேறு நாட்டிற்கு மாற்றுமாறு எந்த ஒரு பொதுநலவாய அரசும் தம்மைக் கோரவில்லை என்று பொதுநலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா கூறியுள்ளார். பொதுநலவாய அமைச்சர்களின் செயற்பாட்டுக் கூட்டத்தொடரின் முடிவில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த சர்மா இதனைத் தெரிவித்தார். இப்பத்திரிகையாளர் மகாநாட்டில் அமைச்சர்கள், செயற்பாட்டுக் குழுவின் தலைவர் - பங்களாதேஷின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி திபு மோனியும், உதவித் தலைவர் - அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப்காரும் கலந்துகொண்டிருந்தனர். இம்மூவரும் அமைச்சர்கள் செயற்பாட்டுக் குழுவிற்கும் கூட்டத்தொடரை இடம்மாற்றுவதற்கும் எந்த விதச் சம்பந்தமும் இல்லை என வலியுறுத்துவதில் குறியாயிருந்தார்.

### மேநாள் கொண்டாட்டங்களில் கொழும்பில் கூடவுள்ள பெருமளவு மக்கள்

பிரதான அரசியற் கட்சிகள் யாவும் கொழும்பில் தமது மேநாள் கொண்டாட்டங்களை நடாத்தவுள்ளதால் பெருமளவு மக்கள் அக்காலப்பகுதியில் தலைநகரில் கூடவுள்ளனர். அந்நாளில் கொழும்பு பெருமளவு நீலமும் சிவப்புமாகவே காணப்படும் என தெரிகிறது. இக்காலத்தை இலங்கையின் சுதந்திரக் கட்சி தனது அங்கத்தவர்களை அதிகரித்துக் கொள்ளும் காலமாக குறித்துள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இலங்கை சுதந்திரக் கட்சியுடன் இணைத்துள்ள கொம்யூனிசக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போன்றவை தனித்தனியான மேநாள் கூட்டங்களை நிகழ்த்தவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி ஶ்ரீகோத்தாவில் சாதாரண கூட்டமொன்றை நடாத்திக் கொண்டு குருநாகலை மற்றும் பதுளை பிரதேசங்களில் தனது பிரதான மேநாள் கொண்டாட்டங்களை நடாத்தவுள்ளது குறிப்பிடத்தக்கது.

### இலங்கை வங்கி ஐந்தாவது வருடமாக முன்நிலையில்

லண்டனைத் தளமாகக் கொண்ட வியாபாரப் பெயர் பெறுமதி மற்றும் தந்திரோபாயம் கம்பனியின் இலங்கைக் கிளையானது தொடர்ந்து ஐந்தாவது வருடமாக சிறந்த வங்கி வியாபாரப் பெயராக இலங்கை வங்கியின் பெயரை இலங்கையில் முதனிலைப் படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Leader

### பொதுநலவாயத் தலைவர்களின் கூட்டத்தில் கனடாவின் நிலைப்பாடு

நவம்பரில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாயத் தலைவர்களின் கூட்டத்தில் கலந்துகொள்வது தொடர்பான தனது இறுதி முடிவை கனடா வெளியிட்டுள்ளது. அதன்படி கனடாவிலிருந்து முழு வலுவுடைய தரம் வாய்ந்த குழு எதுவும் பொதுநலவாயத் தலைவர்களின் கூட்டத்தில் கலந்து கொள்ளமாட்டார்கள் என தெரிவித்துள்ளது. முன்னர் இலங்கையின் மனித உரிமை விவகாரகளை கவனித்துக் கொண்டிருப்பதாகவும் அம் மனிதவுரிமை விவகாரங்களின் அடிப்படையிலேயே பொதுநலவாயத் தலைவர்களின் கூட்டத்தில் கலந்து கொள்வது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் கனேடிய பிரதமமந்திரி கூறியிருந்தார். ஆனால் தற்போது அந்நாட்டின் முடிவு வெளியிடப்பட்டுள்ளது. கனேடிய வெளிவிவகார மற்றும் சர்வதேச வர்த்தக திணைக்களத்தின் பேசவல்ல அதிகாரியான மெமா வெல்போட் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். கனடாவின் எண்ணமானது இலங்கையின் மனிதஉரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறுதல், நல்லிணக்கம், இறுதிக்கட்டப் போரின் போது நிகழ்ந்ததாக கூறப்படும் விடயங்கள் என்பவை தொடர்பாக கனடா கொண்டுள்ள கொள்கையை உறுதியாகவும் தெளிவாகவும் எப்போதுமே வெளிப்படுத்தி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். கடந்த வாரம் கனேடிய பிரதமர் வெளியிட்ட அறிக்கையொன்றில் இலங்கையிலிருந்து பொதுநலவாயத் தலைவர்களின் கூட்டம் வேறொரு இடத்திற்கு மாற்றப்படுவதை தான் விரும்புவதாக தெரிவித்திருந்தார்.

### ஒட்டுக் கேட்கப்படும் தொலைபேசிகள்?

இலங்கையில் பாவனையிலுள்ள கையடக்க மற்றும் நிலையான தொலைபேசி இணைப்புக்களில் ஒட்டுக்கேட்பதற்கான கருவிகளை தேசிய புலனாய்வுப் பணியகம் கொள்வனவு செய்துள்ளதாக அவ்வாணையத்தின் மூலங்களிலிருந்து தகவல் கசிந்துள்ளது. இக்கருவிகள் கடந்த வருடம் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் இக்கருவிகளைக் கொண்டு தொலைபேசிச் சேவை வழங்குனர்களின் உதவி இன்றி நேரடியாகவே இலங்கையில் பாவிக்கப்படும் எந்த ஒரு தொலைபேசியிலும் ஒட்டுக் கேட்க முடியுமென்பது தெரியவருகின்றது. இவ்விடயத்தினை தெரிந்து கொண்டுள்ள சட்டவாளர் சங்கம் இவ்வாறு தொலைபேசிகளை ஒட்டுக்கேட்பது சட்டமுரணானது என்பதுடன் இவ்விடயத்தினை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லவும் முடியும் எனவும் தெரிவித்துள்ளது. “தனி மனிதனின் சுய உரிமையை அல்லது தனித்துவத்தை பாதிக்கும் ஓர் விடயமாக இவ் ஒட்டுக்கேட்டல் அமைந்துள்ளதுடன் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தினை மீறுவதாக இவ்விடயம் உள்ளது.” என சட்டவாளர் சங்க செயலாளர் சஞ்சய் கமகே தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் பாதுகாப்புக் காரணங்களுக்காக தொலைபேசி ஒன்றை ஒட்டுக்கேட்க வேண்டுமாயின், அந்நடவடிக்கை நீதிமன்றங்களின் ஊடாகவே செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

### சிரேஸ்ட காவல்துறை அத்தியட்சகருக்கு கொலை மிரட்டல்

இரத்தினபுர பிரிவுக்குப் பொறுப்பான சிரேஸ்ட காவல்துறை அத்தியட்சகரான ரான் பிரிசாந்த ஜெயகொடிக்கு விடுக்கப்பட்ட கொலைமிரட்டல் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தில் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை அப்பிரதேசத்திற்கு காவல்துறை அத்தியட்சகராக கடமையேற்றவுடன் பிரிசாந்த ஜெயகொடி மேற்கொண்டிருப்பதாலேயே அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் கொலைமிரட்டல் விடுக்கப்பட்டிருந்தன. ஏப்ரல் மாதம் 22ஆந் திகதி பி.ப 3.30 மணியளவில் தொலைபேசி அழைப்பினூடாக ஆளொருவர் மேற்கொண்ட மிரட்டலில் காவல்துறை அதிகாரங்களை கையில் எடுத்துக்கொண்டு அத்தியட்சகர் கூடுதல் ஆட்டம் போடுவதாகவும் அதனால் அவரும் அவரது குடும்பத்தவர்களும் கொல்லப்படுவார்கள் என்றும் மிரட்டல் விடுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் மிரட்டலை விடுத்தவர் காவல்துறை பதவியை விட்டுத் தானாகவே விலகிச் சென்றால் மட்டுமே அத்தியட்சகர் உயிர் தப்புவார் எனவும் கூறியுள்ளார். காலிப் பிரதேசத்தில் பொதுத் தொலைபேசி கூண்டிலிருந்து இத்தொலைபேசி அழைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது விசாரணைகளின் மூலம் தெரிவந்துள்ளது.



# முரசின் விளையாட்டு செய்திகள்

## பார்சிலோனா ஓபன் டென்னிஸ் தொடரில் ஸ்பெயினின் நடால் சாம்பியன் பட்டம் வென்றார்



ஸ்பெயினில் ஆடவருக்கான ஏ.டி.பி., பார்சிலோனா ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்றது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதிச் சுற்றில் ஸ்பெயினின் ரபெல் நடால், சகநாட்டைச் சேர்ந்த நிகோலஸ் அல்மார்கோவை சந்தித்தார். போட்டியின் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய நடால் 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார்.

8வது முறை பார்சிலோனா ஓபன் டென்னிஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற ஸ்பெயினின் ரபேல் நடால் (2005,06,07,08,09,11,12,13) இத்தொடரில் 8வது முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றார். தவிர, இத்தொடரில் அதிக முறை சாம்பியன் பட்டம் வென்ற வீரர்கள் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.


## காவல்துறையின் புதுவருட விழா

திருகோணமலை பொலிசாரும் சிவில் பாதுகாப்பு குழுவினரும் இணைந்து ஏற்பாடு செய்த புதுவருட விளையாட்டு விழா 27.4.2013ல் திருமலை நகரத்தில் நடைபெற்றது. காலையில் ஆண், பெண்களுக்கான துவிச்சக்கர வண்டி ஓட்டம், வீதி ஓட்டம் ஆகியன நடத்தப்பட்டன. *(கதிரவன்)*



## போல்வால்ட் வீராங்கனை 23ம் வயதில் அகால மரணம்

ஐரோப்பா கண்டத்தில் உள்ள சைப்ரஸ் நாட்டின் போல்வால்ட் வீராங்கனை மரியானா சகரியாடி. 23 வயதான இவருக்கு கடந்த 2011ம் ஆண்டு ஹோட்கின் லிம்போமா என்ற ஒரு வகை ரத்தப் புற்று நோய் பாதிப்பு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.



இதையடுத்து கிரீஸ் நாட்டில் உள்ள ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தார். கடந்த சில மாதங்களாக அவரின் உடல்நிலை மோசமடைந்த நிலையில் கடந்த வாரம் கோமா நிலைக்கு சென்றார். கோமாவில் இருந்து மீளாமலேயே மரண மடைந்தார். இதை அம்மருத்துவமனை வைத்தியர்கள் உறுதி செய்தனர்.

மரணமடைந்த மரியானா சகரியாடி, கடந்த 2010ம் வருடம் ஒக்டோபர் மாதம் டெல்லியில் நடைபெற்ற காமன்வெல்த் போட்டிகளில் போல்வால்ட் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மினி ஒலிம்பிக் ஆரம்பம்



இலங்கை பல்கலைக் கழகங்களுக்கிடையிலான 11ஆவது மினி ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் மே மாதம் 2ஆம் திகதி முதல் ஆரம்பமாகி 12ஆம் திகதி வரை மொறட்டுவப் பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலைப்பந்து, றக்பி, எல்லே, கூடைப்பந்தாட்டம், துடுப்பாட்டம், பூப்பந்தாட்டம், கால்பந்தாட்டம், நீச்சல், பேஸ்போல், கரப்பந்தாட்டம், டென்னிஸ், ஹொக்கி, சதுரங்கம், கராத்தே, பளுதூக்கல், மேசைப்-பந்தாட்டம், கரம், மல்யுத்தம், வீதியோட்டம் மற்றும் தடகளப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. இலங்கையிலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்களின் பெரு விளையாட்டு அணிகள், மற்றும் தடகள விளையாட்டு வீரர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றுகின்றனர்.

## மாகாண ஹொக்கிப் போட்டிகள் காரைதீவில்!!

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் மாகாண நிலை ஹொக்கி போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையன்று (05.05.2013) காரைதீவு பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளது. *(கதிரவன்)*

## திருமலைத் துடுப்பாட்டச் சங்கப் பொதுக்கூட்டம்

திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் பொதுக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை 05.05.2013 காலை 9.00 மணிக்கு நடைபெற உள்ளது. கழககங்களின் தலைவர், செயலாளர்கள் மாத்திரம் இதில் பங்கு கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற உள்ளது. *(கதிரவன்)*




காலன் அந்த இளைஞனின் மனைவியின் ஊடாக அவனின் உயிரைக் கவர்ந்து ஆண்டு ஒன்று கடந்து விட்டது.

திருகோணமலையில் ஐயனார் கேணிப்பகுதியில் 18.04.2012ல் கழுத்தறுக்கப்பட்டுக் கொல்லப்பட்ட 28 வயதான ஈஸ்வரதாசன் கேதீஸ்வரனின் முதலாம் ஆண்டு நினைவுநாள் கடந்த 18ம் திகதி அவரது குடும்பத்தாராலும் நண்பர்களாலும் நினைவு கூறப்பட்டது.

தனது மனைவியின் வீட்டிலிருந்து 18.04.2012ன் இரவு 8.30. மணியளவில் தனது வீடு நோக்கிப் புறப்பட்ட கேதீஸ் மனைவியின் வீட்டிலிருந்து சுமார் 25 மீற்றர் தொலைவிற்குள்ளாகவே கழுத்தறுக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

துரித கதியில் இயங்கிய காவல்துறையின் நடவடிக்கையால் கொலைச் சந்தேக நபர்கள் இருவரும் 06.06.2012ன் அதிகாலை நேரத்தில் அவர்களது வீடுகளிலிருந்து கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் ஒருவர் கொலை செய்யத் தூண்டியதுடன் கொலைக்கு உடந்தையாக இருந்த பிரதான சந்தேக நபரான 30 வயதுடைய அகில மேனக மல்லிகாகே என்றவனாவான்.

மற்றையவன் கொலை செய்தவன், கொலை செய்வதற்காகக் கூலிப்படையாக செயற்பட்டவன் என்ற சந்தேகத்துடனும் கைது செய்யப்பட்ட 26 வயதான அ.அ. டொன் தினேஸ் சிந்தக்க அத்தாவுட ஆவான்.

கொலை நடந்த இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலைபேசியின் மீள் நிரப்பு அட்டை, அங்கு காணப்பட்ட கையுறையின் துண்-



டொன்று, மதிலொன்றில் காணப்பட்ட இரத்தம் ஆகிய தடயங்களைக் கொண்டு புலனாய்வைத் தொடக்கியது காவல்-துறை. 19ம் திகதி அழைக்கப்பட்ட மோப்ப நாய் கையுறைத் துண்டினை முகர்ந்த பின் கேதீஸின் மனைவியின் வீட்டின் பின்புறமதில் வரை சென்று நின்று விட்டது.

தொலைபேசியின் மீள்நிரப்பு அட்டையே பெருந் தடயமாக இக் கொலைச் சந்தேக நபர்களைக் கைது செய்ய உதவியது. அம் மீள் நிரப்பு அட்டையின் ஊடாக முதலாவது சந்தேக நபர் தனது ஏர்டெல் இணைப்பினை மீள நிரப்பியதை கொலை நடந்த சில நாட்களுக்குள்ளேயே அறிந்து கொண்ட புலனாய்வுத் துறை மேலும் தடயங்களைத் திரட்டிக் கொள்வதற்காகக் கொலையாளிகளின் சுதந்திரமான நடவடிக்கைகள் எதனையும் ஊறு செய்யாமல் அவதானிப்பை மட்டுமே மேற்கொண்டு இருந்தது.

அக் கொலையாளிகள் யாருடன் தொடர்பை ஏற்படுத்துகின்றார்கள் என அவதானித்த போது அவர்களின் கழுகுப் பார்வைக்குள் மாட்டிக் கொண்டாள் இக் கொலையின் திரைமறைவுச் சூத்திரதாரி எனச் சந்தேகிக்கப்படும் கேதீஸ்வரனின் மனைவி திருமதி. ஹம்சாயினி கேதீஸ்வரன்.

கொலை நடந்த தினமான 2012 ஏப்ரல் 18 தொடக்கம் கொலையாளிகள் கைது செய்யப்பட்ட தினமான 2012 ஜூன் 06ம் திகதி வரையான சுமார் 45 நாட்களின் பின்னர் அதிகாலையில் கொலைச் சந்தேக நபர்களின் வீடுகளின் உட்புகுந்த விசேட காவல்துறையினரால் இவர்கள் கைது செய்யப்பட்ட பின்னரே பல திடுக்கிடும் உண்மைகள் வெளி வரத் தொடங்கின.

2006ம் ஆண்டில் தனது உயர்தரப் படிப்பை முடித்துக் கொண்ட கேதீஸ்வரன் அவ்வாண்டே மேற் படிப்புக்களுக்காக மாணவ வதிவிட அனுமதியில் ஐக்கிய இராச்சியத்திற்கு கல்வி கற்கச் சென்றுள்ளார். 2010ல் சர்வதேச புலம் பெயர்





முகவராண்மையிடம் (ஐ.ஓ.எம்) சரணடைந்த கேதீஸ் அவ்வாண்டின் ஜனவரி மாதம் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டிருந்தார்.

திரும்பியவுடன் தனது காதலியை நிரந்தரத் துணையாக்கிக் கொண்ட கேதீஸ்வரனின் திருமணம் 2010 மே மாதம் நடந்தேறியது. அடுத்த ஆறு மாதத்திற்குள் ஹம்சா தனியே மாணவ வதிவிட அனுமதியில் இலண்டன் சென்றுள்ளாள். அவ்வாறு செல்லும் போது தான் லண்டன் சென்று பின்னர் தனது கணவனை தங்கிவாழும் வதிவிட அனுமதியில் இலண்டனுக்கு அழைத்துக் கொள்ளும் முடிவைத் தாம் இருவரும் எடுத்திருந்ததாக அனைவருக்கும் தெரியப்படுத்தியிருந்தாள். எனினும் இவ்விடயம் சாத்தியமற்றது ஏனெனில் கேதீஸ் ஐ.ஓ.எம் மிடம் சரணடைந்து நாடு திரும்பியுள்ளதால் அவர் தங்கிவாழும் அனுமதியில் மீள லண்டன் செல்ல முடியாது என்றே கேதீஸின் பெற்றோர் கருதினர். ஆனாலும் அதற்கு எந்த மதிப்பும் கொடுக்காமல் 2011 பெப்ரவரி மாதம் 2ம் திகதி ஹம்சா தனியே இலண்டனுக்குப் பயணமாகி இருந்தாள். அவள் பயணமான திகதியில் கேதீஸ் ஹொட்டல் முகாமைத்துவக் கல்வியை கம்பஹாவில் கற்றுக் கொண்டிருந்ததால் விமான நிலையத்திற்கு அவரால் செல்ல முடியாதிருந்தது. *(தொடரும்)*

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ வினியோகத்தர்கள் - திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04. 05. 2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.